இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest


ஜனவரி 2024 January | இதழ் 396 Issue

# தமிழர் தகவல்
TAMILS' INFORMATION


ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal

## 2023ன் தெரிவு



# அமெரிக்க ‘ரைம்’ சஞ்சிகையின் நூறில் ஒருவர் ஈழத் தமிழர்



## விஞ்ஞானி எம். சஞ்சயன்

தமிழர் தகவல் 33வது ஆண்டு விருது விழாவும் 33வது ஆண்டு மலர் வெளியீடும் ஏப்ரல் மாதம்

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

33வது ஆண்டில் 33rd Year

Growing with the Community ESTD-1991

ISSN 1206-0585

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
www.tamilsinformation.info

*ஆசிரியரிடமிருந்து...* *From the Editor*

# பின்னோக்கிய பாய்ச்சல்

ஓர் அரசாங்கம் என்பது எப்போதும் மக்கள் தேவை அறிந்து, அவர்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று அதனைச் செம்மையாக நடைமுறைப் - படுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாட்டையே ஜனநாயகம் என்று மக்கள் ஏற்றுக் கொள்வர்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒன்ராறியோ மாநில சட்டசபை தேர்தலில் டக் ஃபோர்ட் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி இரண்டாவது தடவையாக பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியது. மக்கள் வழங்கிய பேராதரவைப் பயன்படுத்தி அதனை மேலும் பலப்படுத்தும் வாய்ப்பு இதனூடாக இக்கட்சிக்குக் கிடைத்தது.

மறுதரப்பில், அதீத பெரும்பான்மைப் பலத்தினால் தம்மிஷ்டப்படி எதனையும் செய்யலாமென்று தவறான பாதையை ஆட்சித்தரப்பு தெரியுமாயின், என்ன நடைபெறும் என்பதை ஒன்ராறியோ ஆட்சியில் காண முடிந்தது.

ஒன்ராறியோவின் பசுமை வளையக் காடுகளை (Greenbelt) அழித்து வீடுகளை நிர்மாணிக்க எடுத்த முயற்சி, பீல் பிராந்திய சபையை மூன்று நகரங்களாக பிரிக்க எடுத்த முயற்சி ஆகிய இரண்டையும் இடைநடுவில் ஒன்ராறியோ அரசு கைவிட நேர்ந்ததை உதாரணமாக இதற்குக் கூறலாம்.

மக்கள் வழங்கிய பெரும்பான்மைப் பலத்தை மக்கள் விரும்பாத அல்லது மக்கள் எதிர்க்கும் திட்டங்களை நிறைவேற்ற முயற்சித்தால் இப்படித்தான் முடிவு ஏற்படும் என்பதை நேரில் காண்கிறோம்.

ஒன்ராறியோவில் ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கு, பசுமை வளையக் காடுகளை அழித்து தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கையை மாகாண அரசு மேற்கொண்டது. காணிகள் விநியோகத்தில் தகாத முறைமையும் ஊழலும் இருந்ததாக புகார்கள் எழுந்தன.

இதன் தொடர்ச்சியாக ஸ்ரீப் கிளார்க், கலீத் றஷீத் ஆகிய அமைச்சர்கள் பதவி இழந்தனர். இரண்டு அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இறுதியாக பசுமை வளையக் காணிகளின் வீடமைப்புத் திட்டத்தை டக் ஃபோர்ட் அரசு முழுமையாக கைவிட நேர்ந்தது.

மிஸிஸாகா, பிராம்ரன், கலிடோன் ஆகிய மூன்று நகரசபைகளையும் ஒன்றிணைத்த பீல் பிராந்திய அமைப்பை ரத்துச் செய்து மூன்றையும் சுயாதீன நகரசபைகளாக இயங்க வைக்கும் திட்டத்தை டக் ஃபோர்ட் அரசு தன்னிச்சையாக மேற்கொண்டது. திடீரென புதிய திட்டத்தைக் கைவிடுவதாக முதலமைச்சர் டக் ஃபோர்ட் அறிவித்துள்ளார்.

மூன்று நகரசபைகளும் தனித்தனியாக இயங்குமாயின் மக்கள் மீதான வரிச்சுமை அதிகரிக்கலாம் என்பதால் தனது திட்டத்தை கைவிட நேர்ந்ததாக முதலமைச்சர் காரணம் கூறியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளை பின்னோக்கிச் செல்லுதல் (Reverse) என்று ஒன்ராறியோ லிபரல் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மிஸிஸாகா நகர முதல்வர் பொனி குறொம்பி தெரிவித்துள்ளார்.

மக்கள் விருப்பத்தை மீறி எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒருபோதும் முன்னோக்கி நகர முடியாது என்பதற்கு ஒன்ராறியோ அரசின் இரண்டு பின்வாங்கல்களும் நல்ல உதாரணம்.

**திரு எஸ். திருச்செல்வம்**

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# கனடா வந்த சர்வதேச மாணவர்களில சுமார் 7,000 பேர் அகதிக் கோரிக்கை! புதிய விசாக்களுக்கு மேலதிக நிபந்தனை!!

## Refugee Claimants from International Students Increased!

வெளிவாரி மாணவர்களாக கனடாவில் கல்வி கற்க பல்லாயிரம் பேருக்கு விசா வழங்கியிருப்பதால், அரசியல் - பொருளாதார ரீதியாக கனடா பல பிரச்சனைகளை சந்திக்க நேர்ந்துள்ளது. 'சர்வதேச மாணவர்கள்' (International Students) கனடாவில் கல்வி கற்க வழங்கிய விசாவை துஷ்பிரயோகம் செய்து வருவதால் பல புதிய நெருக்கடிகளை கனடிய அரசு சந்தித்து வருகிறது.

கற்கை விசாவில் கனடா வந்த சர்வதேச மாணவர்கள் பலர் குறிப்பிட்ட கல்வி நிலையங்களில் கற்கவில்லையென்பதும், வேறு சிலர் இடம்மாறி காணாமற் போயுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இவர்களுள் சிலர் எல்லைகளைக் கடந்து அமெரிக்கா சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது.

போலியான கல்வி நிலைய அனுமதிப் பத்திரங்களுடன் வந்த ஆயிரக்கணக்கானோர் இரண்டும் கெட்டான் நிலையில் கல்வி வசதியின்றி தொழிலுமின்றி நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். இவர்களுக்கு தற்காலிகமாக மனிதாபிமான அடிப்படையில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்க கனடிய அரசு ஆலோசித்து வருகிறது.

அதேசமயம், கற்கை விசாவில் வந்த சர்வதேச மாணவர்கள் 4880 பேர் கடந்த ஆண்டில் கனடாவில் அகதி அந்தஸ்து கோரி மனு தாக்கல் செய்துள்ளமை ரூடோ அரசுக்கு புதிய பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளது. 2018ம் ஆண்டு சர்வதேச கற்கை மாணவர்கள் 1135 பேர் அகதிக் கோரிக்கையை சமர்ப்பித்தனர். ஆனால் இது கடந்த ஆண்டில் இரு மடங்காக அதிகரித்தது. 2023ல் இந்த எண்ணிக்கை மேலும் பல மடங்காகலாமென எதிர்வுகூறப்படுகிறது.

கனடா இதுவரை 897,750 (எட்டு லட்சத்துக்கும் மேலான) சர்வதேச மாணவர் கனடா வருவதற்கு விசா வழங்கியுள்ளது. 2018ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 567,065 ஆக இருந்தது.

கனடாவில் தற்போது வீடு வாடகை அதிகரிப்புக்கும், குடியிருப்பு வசதி தட்டுப்பாட்டுக்கும் சர்வதேச மாணவர்கள் பெருமளவில் இங்கு வந்துள்ளதே காரணமென பெரும்பாலான கனடியர்கள் கருத்துக் கணிப்புகளில் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், கனடாவில் அதிகரித்துவரும் வாடகையினால் தாங்கள் தங்கிட வசதியின்றி சிரமங்களை சந்திப்பதாகவும், தங்களுக்கு விசா வழங்கிய கனடிய அரசோ அல்லது கற்கை அனுமதி வழங்கிய கல்வி நிலையமோ இதனையிட்டு அக்கறை காட்டவில்லையென்று மாணவர் தரப்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச மாணவர்கள் தங்கள் கற்கை நேரத்துக்குப் பின்னர் வாரமொன்றுக்கு ஆகக்கூடியதாக 20 மணித்தியாலங்கள் விரும்புமிடத்தில் தொழில் புரிய கனடிய அரசு வேலை பர்மிட் வழங்கு - கிறது. இந்த வருமானத்துக்கு வருட முடிவில் ஒவ்வொருவரும் வரி தாக்கல் செய்ய வேண்டும்.

வேலை நேரத்துக்கான மணித்தியாலங்களை அதிகரிக்க வேண்டுமென மாணவர் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. தற்போதைய நேரக்கட்டுப்பாடு 2024 முதற் காலாண்டு வரை முன்னர் போன்றே தொடருமென குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மாணவர்களை அதிகளவில் அனுமதிப்பதற்கு உள்நாட்டில் அதிகரித்துவரும் எதிர்ப்பி - னைக் கருத்தில் எடுத்து, இவ்வருடத்தில் விசா வழங்கும் நடைமுறையில் மேலதிக கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பான முதற்கட்ட அறிவிப்பை குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் வெளியிட்டுள்ளார்.

மோசடியையும் துஷ்பிரயோகத்தையும் தடுப்பதற்கு சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் திட்டத்தை வெளியிட்ட அமைச்சர் "அனுபவித்தது போதும்" (enough is enough) என்று கூறியுள்ளார்.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் கனடாவுக்கு அனுமதி பெறும் சர்வதேச மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான நிதி பத்தாயிரம் டாலர்களிலிருந்து 20,635 டாலர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் கல்விக் கட்டணம், போக்குவரத்துச் செலவு ஆகியவற்றுக்கு மேலானதாகும்.



எஸ்தி

# கனடாவை விட்டு வெளியேறும் கனடியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

கனடாவிலிருந்து வருடாவருடம் வெளியேறும் கனடியர்களின் எண்ணிக்கை இப்போது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் முதல் ஆறு மாதங் - களில் சுமார் 42,000 பேர் கனடாவை விட்டு வெளியேறியுள்ளனர். 2021ம் ஆண்டில் 85,927 பேரும், 2022ல் 93,818 பேரும் வெளியேறியுள்ளதாக கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

அதேசமயம் இதே வருடங்களில் சுமார் 263,000 பேர் புதிதாக கனடாவில் குடியேறியுள்ளதாக பதியப்பட்டுள்ளது. கனடிய சனத்தொகையில் சுமார் ஒரு வீதமானவர்களை வருடாந்தம் இங்கு குடியேற அனுமதி வழங்கப்படுகிறது. கனடாவில் விச வாயு வேகத்தில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, வீடு வசதியின்மை, அதிகரித்துச் செல்லும் வீட்டு வாடகை போன்ற காரணங்களால் பலர் தாங்கள் வாழ்ந்து வந்த சொந்த நாடுகளுக்கு திரும்பிச் செல்வதையும் குறிப்பிட்ட அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

"The dream of making it big in Canada is turning into a battle for survival for many immigrants due to the high cost of living and rental shortages, as rising emigration numbers hint at newcomers being forced to turn their back on a country that they chose to make their adopted home" என்று கனடிய ஊடக செய்தியொன்று தெரிவிக்கிறது.

2019ம் ஆண்டுக்குப் பின்னர் இங்கு குடியேறியவர்களில் கணிசமானோரே அண்மைய மாதங்களில் நாட்டைவிட்டு வெளியேறி செல்ல ஆரம்பித்துள்ளனர். இதனைவிட, ஏற்கனவே சட்டவிரோதமா கவும், வேலை பர்மிட் முடிந்தபின்னரும் இங்கிருந்தவர்களும், அகதிக்கோரி - க்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் தங்கி இருப்பவர்களும் வெளியேற்றப்படும் நடவடிக்கைகளை அரசாங்கம் துரித மாக மேற்கொண்டுள்ளது. மறுபுறுத்தில் கனடிய எல்லைப்புறங்களால் சராசரி - யாக நாளொன்றுக்கு 50-100 வரையா - னோர் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவின் நாற்பது மில்லியன் சனத்தொகையில் சுமார் எட்டு மில்லியன் பேர் ஏதாவது ஒரு உடல் ஊனத்துடன் இருப்பதாக கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த எண்ணிக்கையை விட இது இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. முதியவர்களுக்கு மட்டும் இப்பிரச்சனை இருப்பதாக கூற முடியாதென்றும், பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் உடல் ஊனமுற்றவர்களில் பெரும்பாலானவர்கள் என்று புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

இலங்கையின் நகர்ப்புற (கொழும்பு உட்பட) யாசகர்களில் பெண்களே அதிகமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நகரப்பகுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பொன்றின் பிரகாரம் 3661 யாசகர்களில் 55 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள். அநேகமான யாசகர்கள் சக்கர வண்டிகளை பயன்படுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட தொகைப் பெண்கள் கைக்குழந்தைகளுடன் வீதி ஓரங்களில் வாழ்ந்து வருபவர்களென தெரிவிக்கப்படுகிறது.

உலகில் வாழ்க்கைச் செலவு அதிகமான நகரங்களில் முதல் மூன்றின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. சுவிட்ஸர்லாந்தின் தலைநகரான சூரிச் இரண்டாமிடத்திலும், அமெரிக்காவின் நியூயோர்க் மூன்றாம் இடத்திலும் உள்ளன. உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், போக்குவரத்து, சுயதேவைப் பொருட்கள் என்பவற்றின் விலைகளின் அடிப்படையில் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாறியோவில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு சூட்டப்படும் பெயர்களில் ஒலிவியா தொடர்ந்து 14 வருடங்களாக முதல் இடத்திலுள்ளது. இரண்டாவது இடத்தில் சார்லற் பெயர் உள்ளது. ஆண் குழந்தைகளின் பெயரில் நோவா தொடர்ந்து பல வருடங்களாக முதல் இடத்தில் நிற்கிறது. இரண்டாவது இடத்தில் லியாம் பெயர் உள்ளது. இருபால் குழந்தைகளிலும் முதல் பத்துப் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறந்தால் முப்பது நாட்களுக்குள் அதன் பெயரை சட்டப்படி பதிய வேண்டும்.

கேரளாவிலுள்ள கண்ணூர் மாவட்ட மருத்துவமனையின் சவச்சாலைக்கருகில் நாய் ஒன்று நான்கு மாதங்களாக காத்திருக்கிறது. தனது எஜமானை சவச்சாலைக்குள் கொண்டு சென்றதைப் பார்த்த இந்த நாய் அவர் இறந்துவிட்டதை அறியாததாக அவர் வருகைக்காக காத்திருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கிறது. அங்கு பணியாற்றும் டாக்டர்களும், ஊழியர்களும் வழங்கும் பிஸ்கட்டை மட்டும் இந்த நாய் உண்டு வருகிறது. இங்கு கடமையாற்றும் ஒரு பெண் மருத்துவர் இதனை தன்னுடைய வீட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதி கேட்டுள்ளார்.

வைஷ்ணவ பிராமணர்கள் மட்டுமே திருப்பதி கோவிலில் லட்டு தயாரிக்க முடியுமென தேவஸ்தானம் அறிவித்ததால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. திருப்பதிக்குத் தேவையான பொருட்களையும், ஊழியர்களையும் வழங்குவது ஸ்ரீனிவாசா என்ற தனியார் நிறுவனம். இந்நிறுவனம் திருப்பதிக்கு லட்டு தயாரிப்பதற்கென ஆட்கள் தேவையென்று வெளியிட்ட விளம்பரத்தில் வைஷ்ணவ பிராமணர் மட்டுமே தேவை என்று குறிப்பிட்டதே சர்ச்சைக்குக் காரணமாயிற்று.

## கனடியர்களின் சராசரி ஆயுட்காலம் 81.3 ஆக குறைந்துள்ளது

கனடியர்களின் சராசரி ஆயுட்காலம் கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து குறைந்து வருகிறது. 2019ல் 82.3 ஆகவிருந்த சராசரி ஆயுட்காலம் 2023ல் 81.3 ஆகக்குறைந்துள்ளது. கோவிட் தொற்று ஆரம்பித்த காலத்திலிருந்து முன்னைய ஐந்து ஆண்டினையும்விட அதிகமானவர்கள் இறந்துள்ளனர். புற்றுநோய், இருதயநோய் ஆகிய இரண்டினாலும் ஏற்படும் இறப்புகளுக்கு அடுத்ததாக மூன்றாம் இடத்தில் கோவிட் மரணம் பதிவாகியுள்ளது. 2022ல் கோவிட் காரணமாக சுமார் இருபதினாயிரம் பேர் இறந்துள்ளனர் என கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

## வருமானம் குறைந்தவர்களுக்கான இலவச பற்சிகிச்சை

ஜக்மித் சிங் தலைமையிலான என்.டி.பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்க கனடியர்களுக்கான இலவச பல் சிகிச்சைத் திட்டம் கடந்த மாத இறுதியில் அறிவிக்கப்பட்டது. எண்பத்தேழு வயதுக்கு மேற்பட்டவர்கள் கடந்த மாத இறுதியிலேயே இச்சிகிச்சைக்கு விண்ணப்பிக்கலாமென தெரிவிக்கப்பட்டது, இந்த மாதத்திலிருந்து (ஜனவரி) 77 வயதுக்கும் 86 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். மாதாந்த வருமானம் 90,000 ஆயிரத்துக்குக் குறைவாகவும், பல் வைத்திய காப்புறுதி இல்லாமலும் வசிப்பவர்கள் மட்டுமே இச்சிகிச்சைக்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை கனடிய அரசு தொடர்ந்து அறிவிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீல் பிராந்தியத்தை பிரிக்கும் திட்டம் கைவிடப்பட்டது

மிஸிஸாகா, பிராம்ரன், கலிடோன் ஆகிய மூன்று நகர சபைகளையும் இணைத்த பீல் பிராந்தியத்தை தனித்தனி நகர சபைகளாகப் பிரிக்கும் முன்னைய அறிவிப்பை ஒன்ராறியோ அரசு கைவிட்டுள்ளது. 1974ல் ஒன்றிணைக்கப்பட்ட பீல் பிராந்திய நிர்வாகத்தை தனித்தனி நகர சபைகளாகப் பிரிப்பதற்கு ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட் ஏற்கனவே அறிவித்திருந்தார். இவ்வாறு பிரிக்கும் பட்சத்தில் வரிகளை அதிகரிக்கநேரும் என பிராம்ரன் நகரசபை அறிவித்தது. அதேசமயம் மிஸிஸாகா நகர முதல்வர் ஒன்ராறியோ லிபரல் கட்சித் தலைவராக தெரிவாகியுள்ளதால் இந்த மாதம் 12ம் திகதி முதல்வர் பதவியிலிருந்து விலகுகிறார். இவ்வேளையில் திடீரென ஒன்ராறியோ அரசு பீல் பிராந்தியத்தைப் பிரிக்கும் தனது முன்னைய திட்டத்தை கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்



# உலகம் இப்படித்தான் இயங்குகிறது


எமது உலகம் எவ்வாறு இயங்குகிறது? யார் யார் எல்லாம் இந்த உலகினை இயக்கி வருகிறார்கள் என்பதை தீர்க்கமான துணிவுடன் விலாவாரியாக ஆய்ந்து கடினமான கருத்துக்களை கூறிவருபவர் பேராசிரியர் நோம் ஷோம்ஸ்கி. அவரது நேர்காணல்கள், நூல்கள், கட்டுரைகள் யாவுமே சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பாரிய சர்ச்சைகளைக் கிளப்பியவை.

சென்ற நூற்றாண்டின் கடைக்கால் முதல் இந்த நூற்றாண்டின் முதல்கால் வரை பல்துறைகள் சார்ந்த அறிஞர்களாலும் மிக உயரத்தில் வைத்து மதிக்கப்படும் மேன்மையான, நேர்மையான சமூகஅரசியல் சிந்தனையாளர் நோம் ேசாம்ஸ்கி எனபதில் ஐயமில்லை.

உலகம் எவ்வாறு இயங்குகிறது என்ற தலைப்பில் வெளிவந்த இவரது நூல் அமெரிக்க அரசியலின் நீண்டகாலப் போக்குகளின்மீது காத்திரனமான கூரிய விமர்சனங்களை நேரடியாகவே முன்வைத்துள்ளது.

புலமையுலகில் இவர் ஒரு மொழியியல் பேராசிரியர். உலகளாவிய ரீதியில் அத்துறையில் ஒரு தலைகீழ் புரட்சியை ஏற்படுத்தியவர். உள்மனதிற்கும் மனித மூளையின் செயற்பாட்டுக் கட்டமைப்புக்கும் இடையில் மனித மொழிகள் தொழில்படும் தன்மை பற்றிய இவரது சிந்தனைகள் மிக முக்கியமானவை - யாக இன்றுவரை கருதப்படுபவை.

## ஊரும் உலகும் - 23




குயில் கூவுவதும், சிறிய சிலந்தி தனது வலையை சிக்கலாகப் பின்னுவதும் எவ்வளவு இயற்கையானதோ அதுபோல் வளரும் குழந்தை சொற்களினால் ஓசையுடன் பேசத்துவங்குவது மனிதனின் உள்ளியல்பில் ஊறிப்போன ஒன்று என விளக்கி பிறக்கும் - போதே ஒரு குழந்தை தனது உள்ளுணர்வின் தளமாக மொழியைப் பற்றிய அறிவை ஏற்கனவே கொண்டுள்ளது என்பது இவரது வாதம். எதிர்காலத்தில் மனித இனத்தின் துவக்க கால வரலாறுகளின் வலிமை மொழி - யியல் பற்றிய ஆய்விலேயே புடமிடப்படும் என இவர் அடித்துக் கூறுகிறார்.

1928 டிசம்பர் 7ல் பிலடெல்பியாவில் பிறந்த நோம் சாம்ஸ்கியின் பெற்றோர் யூத மத நம்பிக்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். ஆனால் சியோனிச இடதுசாரி சிந்தனையாளரான அஹத் ஹாமின் எழுதுக்களால் ஈர்க்கப்பட்ட நோம் ஷோம்ஸ்கி சுதந்திரவாத சோசலிச சிந்தனைப் போக்குகளை தனது இலட்சியமாக வரிந்து கொண்டவர். அர்ப்பணிப்புள்ள ஒரு மார்க்சிய -வாதியாக தன்னை வெளிப்படையாகவே இனம் காட்டிக் கொண்டவர்.

1776ம் ஆண்டு முதல் வளம் குன்றிய வறிய நாடுகளின் உரிமைகள் மீதான வளமுள்ள சில நாடுகளின் இடைவிடாத தாக்குதல்கள் பற்றி விளக்கி, அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் ஒன்றியம் இன்னும் ஐரோப்பாவின் பலமுள்ள நாடுகள் சிலவும் உலகின் சுதந்திர வளர்ச்சியின் மூர்க்கமான எதிரிகள் என குற்றம் சுமத்துகிறார்.

சாம்ஸ்கியின் கூற்றுப்படி தனியார் அதிகாரத்திற்கு அடிபணிந்து பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் அமெரிக்காவின் குறிக்கோள் பங்குதாரர்களுக்கு லாபத்தை உருவாக்குவதேயன்றி மக்களுக்கு நன்மை செய்வதல்ல.

சுதந்திர சந்தைப் பொருளாதாரம் என்று எதுவும் இல்லை. அப்படி ஒன்று இருந்தால், அது மூன்று வினாடிகள் கூட நீடிக்காது. பெருவணிகம் அதை அனுமதிக்காது. அமெரிக்காவில் நிலவுவதும், சமீபத்திய தசாப்தங்களில் உலகம் முழுவதும் பரவியிருப்பதும் தடையற்ற சந்தை முதலாளித்துவமே என அழுத்திக் கூறுகிறார். சான்றாக, மிகப்பெரிய நாடுகடந்த நிறுவனங்களின் Fortune 100 பட்டியலில் உள்ள ஒவ்வொரு நிறுவனமும் தலையீட்டுவாதத் தொழில்சார் கொள்கைகளால்தான் பயனடைந்துள்ளது என சாம்ஸ்கி வாதிடுகிறார்.

அமெரிக்க பொருளாதாரத்தின் பகுதிகளான விவசாயம், உயர் தொழில்நுட்பத் தொழில், மருந்துகள் மற்றும் உயிரி தொழில்நுட்பம் போன்றவை அரசமா - னியம் வழங்கும் மூலதனத்துடனேயே தனியார் கைகளில் செயல்படுகின்றன எனத் தெளிவுபடுத்துகிறார்.

இரண்டாம் உலகப் போரின் பின்பு அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஒவ்வொருவரும் சட்ட அடிப்படையில் வன்மையான போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனவும் வாதிடுகிறார். இன்னும் அமெரிக்காவின் பொருளாதார மேலாதிக்கப் போர்கள் மத்திய மற்றும் தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு இன்னும் கிழக்கு ஆசியா ஆகிய மூன்று பிராந்தியங் - களில் பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளனஎன சாம்ஸ்கி ஆதாரங்களுடன் நிறுவி இதேபோல் சோவியத் ஒன்றியம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் “நல்லவை” எனப் போற்றப்பட்ட அத்தனை பண்பு -களையும் அடியோடு சிதைத்தது என குற்றம் சுமத்தியுள்ளார்.

1954ல் குவாத்தமாலாவிலும், 1963 மற்றும் 1965ல் டொமினிகன் குடியரசில், 1964ல் பிரேசிலிலும், 1973ல் சிலியிலும், அமெரிக்க ஆதரவுடன் பாராளுமன்ற அரசாட்சி தூக்கியெறியப்பட்டதை சுட்டிக்காட்டி மத்திய அமெரிக்காவில், 1970களின் பிற்பகுதியில் இருந்து அமெரிக்க ஆதரவுப் படைகளால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 200,000 ஆக இருந்தது எனவும் சமூக சீர்திருத்தத்தையும் ஜனநாயகத்தையும் கேட்டு நின்ற மக்கள் இயக்கங்கள் அனைத்துமே அங்கு அழிக்கப்பட்டன எனவும் எழுதியுள்ளார்.

கிழக்காசிய நாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது “நாங்கள் இரண்டு மில்லியன் மக்களைக் கொன்றோம், மூன்று நாடுகளை வியட்நாம், கம்போடியா, லாவோஸ்ஸ அழித்து, மொத்த இடிபாடுகளாக விட்டுவிட்டு, கழுத்தை நெரித்து வருகிறோம்”, அமெரிக்காவின் பொருண்மிய வளர்ச்சி நிலைப்பதற்கு நாடுகளுக்கிடையில் போர்களைத் தூண்டுவது கொடுமையிலும் கொடுமை என வேதனையுடன் கூறி முடிக்கிறார்.

# A new type of heart syndrome: About 90% of US adults have it

Chronic diseases are the leading cause of death and disability in the United States. A newly defined, dangerous condition highlights the close relationship among several of these common chronic diseases, which plague millions of Americans.

In an advisory published on Oct. 9, the American Heart Association identified the strong connection between cardiovascular disease, kidney disease, Type 2 diabetes and obesity and, for the first time, is defining the overlap in these diseases as a new medical condition: cardiovascular-kidney-metabolic syndrome, or CKM syndrome.

One in three (33%) adults in the U.S. have three or more risk factors that contribute to heart disease, kidney disease or metabolic disorders, according to the AHA's 2023 Statistical Update. Type 2 diabetes and obesity, the two main metabolic disorders under the CKM umbrella, are on the rise and affecting more young people, according to the U.S. Centers for Disease Control and Prevention.What is cardiovascular-kidney-metabolic, or CKM, syndrome?

CKM syndrome refers to the spectrum of cardiovascular, kidney and metabolic diseases, such as Type 2 diabetes and obesity, and how they overlap, potentially increasing a person's risk of dying from heart disease.

“The conditions that make up CKM syndrome are not new. ... We've known these increase the risk for heart disease for years,” NBC News medical contributor Dr. Natalie Azar said in a TODAY segment aired Oct. 9. "What's happening is the AHA wants to reset the framework of how people think about heart disease risk, prevention and management."

Ultimately, the goal of defining CKM syndrome is to get earlier diagnosis and treatment for people at high risk of dying from heart disease, NBC News reported. Heart disease is the No. 1 killer of men and women in the U.S., per the CDC.

CKM syndrome can negatively affect almost every major organ in the body, including the heart, brain, kidneys, and liver, per the AHA — but its biggest impact is on the cardiovascular system. CKM syndrome affects the blood vessels, heart muscles and the rate of fatty buildup of in the arteries, the AHA said in its advisory.

An estimated 90% of U.S. adults fall on the CKM spectrum, Dr. Chiadi Ndumele, the lead author of the AHA advisory and the director of obesity and cardiometabolic research in the division of cardiology at Johns Hopkins University, told NBC News.

The advisory addresses how to identify people at the early stages of CKM syndrome, Ndumele said in a news release. "Screening for kidney and metabolic diseases will help us start protective therapies earlier to most effectively prevent heart disease and best manage existing heart disease," said Ndumele.

### What are the stages of CKM syndrome?

CKM syndrome can be broken down into stages, which correlate to specific screenings and therapies to detect CKM-related health changes and prevent progression to the next stage, per the AHA.

- Stage 0: A person has no cardiovascular, kidney or metabolic risk factors. The AHA advises to maintain lifestyle habits and get heart-health screenings every three to five years to assess blood pressure, triglycerides, blood sugar and cholesterol.
- Stage 1: A person is overweight and/or has excess abdominal fat, impaired glucose tolerance or pre-diabetes. The AHA advises following a healthy lifestyle with a goal of 5% weight loss, and heart-health screenings every two to three years.
- Stage 2: A person has kidney disease, Type 2 diabetes, high blood pressure, or high triglycerides. The AHA advises treatments to prevent progression to heart disease or kidney failure, including medications to control blood pressure, blood sugar, or cholesterol. Patients may be prescribed as Ozempic or Wegovy for weight loss, says Azar. Yearly heart-health and kidney function screenings are recommended.
- Stage 3: A person has early asymptomatic heart disease with metabolic risk factors or kidney disease, or a high risk of heart disease. The AHA advises increasing or changing medications for diabetes or heart disease, yearly screenings, as well as tests to assess the narrowing of arteries.
- Stage 4: A person has diagnosed, symptomatic heart disease and excess body fat, metabolic risk factors or kidney disease. Stage four is divided into two categories, those with kidney failure and those without it. Patients may have already suffered a heart attack, stroke, or heart failure. The AHA advises treating heart disease with consideration of CKM conditions.

"This is a framework that we can all look and say, 'Where do I fit along here?'" says Azar. "The point is to (prevent progress) or regress, so if you're in stage 3, or 2 or 1, you want to go backwards, not forward," Azar adds.

*This article was originally published on TODAY.com*



அ. முத்துலிங்கம்

# கிறிஸ்மஸ் தவளை

இது நடந்தது தென்னாபிரிக்காவின் ஜோஹான்னஸ்பேர்க் நகரில். அங்கே உள்ள பிரபலமான சுப்பர்மார்க்கெட் ஒன்று சில வருடங்களாக நட்டத்தில் ஓடியது. உரிமையாளர்கள் எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தனர். புதுவிதமான பொருட்களை கொண்டுவந்து நிரப்பினர். பல விளம்பரங்கள் செய்தனர். கழிவு விற்பனை என்று ஆசை காட்டினர். என்ன செய்தாலும் லாபம் ஈட்ட முடியவில்லை.

கடைசி முயற்சியாக ஒரு புது மனேஜரை நியமித்தார்கள். அவர் என்னவும் செய்யலாம் என்று அவருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்குள் சுப்பர் மார்க்கெட் லாபம் காட்டவேண்டும் அல்லாவிடில் அது மூடப்பட்டு விடும். அதுதான் ஒப்பந்தம்.

மனேஜர் மனிதர்களின் இயல்பு பற்றி நன்கு அறிந்தவர். ஒரு வாரம் அவர் ஒன்றுமே செய்யவில்லை. சுப்பர் மார்க்கெட் எப்படி இயங்குகிறது என்பதை அவதானித்தார். இரண்டாவது வாரம் யாருமே எதிர்பார்த்திராத ஒரு சிறிய மாற்றத்தை செய்தார். அவருக்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரியை முறைப்பாடுகளுக்கு பொறுப்பாளராக நியமித்தார். அவருக்கு வேறு ஒரு வேலையும் இல்லை. முறைப்பாடுகளை கவனிப்பது மட்டும்தான். தினம் தினம் வாடிக்கையாளர்களிடம் இருந்து வரும் முறைப்பாடுகளை ஆராய்ந்து உடனுக்குடன் நிவர்த்தி காண வேண்டும். முறைப்பாடு எத்தனை சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை, அதை தீர்த்து வைப்பது அவர் வேலை.

ஆறு மாத முடிவில் கிறிஸ்மஸ் அணுகியது. இந்தக் காலங்களில்தான் சுப்பர் மார்க்கெட்டில் அமோகமான விற்பனை நடக்கும். சகல ஊழியர்களும் உற்சாகத்துடனும் அதிகவனத்துடனும் பணியாற்றினார்கள். ஒருநாள் முறைப்பாடு அதிகாரி பதறியபடி மனேஜரின் அறைக்குள் ஓடி வந்தார். “என்ன?” என்றார் மனேஜர். ஒரு மூதாட்டி தொலைபேசியின் மறுமுனையில் நிற்கிறார். மிகப்பாரதூரமான முறைப்பாடு என்று அச்சமூட்டுகிறார். என்ன விசயம் என்று கேட்டால் சொல்கிறாரில்லை. உடனே தன் வீட்டுக்கு வரட்டாம். “போவதுதானே” என்றார் மனேஜர். “இல்லை உங்களை நேரிலே வரட்டாம்.”

மனேஜர் தன் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். மூதாட்டியின் வீட்டு முகப்பிலே தென்னாப்பிரிக்காவின் ஆறு வர்ணக்கொடி பறந்தது. மெலிந்து நேராக நின்ற கிழவி ஒன்றுமே பேசாமல் கதவைத் திறந்து மனேஜரை அழைத்துக்கொண்டு சமையல் அறைக்கு சென்றார். முட்டைக்கோசு ஒன்று இலைகள் பிரிக்கப்பட்டு ஏதோ சமையலுக்காக மேசையில் கிடந்தது.. கிழவி சொன்னார். ‘அந்த முட்டைக்கோசை பிரித்தபோது அதற்குள் இருந்து ஒரு தவளை பாய்ந்தது. நான் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்?’

மனேஜருடைய மூளை வேகமாக வேலை செய்தது. கிறிஸ்மஸ் விற்பனையை யோசித்தார். இந்த விசயம் வெளியே தெரியவந்தால் சுப்பர்மார்க்கெட்டை மூடிவிடவேண்டியதுதான்.

‘அப்படியா? என் வாழ்க்கையில் இப்படியான ஒன்றை நான் பார்த்ததில்லை. உங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் இதுமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்வது என் பொறுப்பு.’

‘இதைச் சொல்லவா இத்தனை தூரம் வந்தீர்?’

‘மன்னிக்கவேண்டும் அம்மையாரே. உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் கஷ்டத்தையும் எப்படியும் சரிசெய்வோம்.’

‘’இது எத்தனை பாரதூரமான தவறு என்று உமக்கு புரிகிறதா?’

‘புரிகிறது. அந்த தவறுக்கு ஈடாக என்னவும் செய்யக் காத்திருக்கிறோம்.’

‘என்ன செய்வீர்?’

‘இன்றிலிருந்து எங்கள் சுப்பர்மார்க்கெட்டில் உங்கள் தேவைக்கான சாமான்களை வாழ்நாள் முழுக்க பாதி விலையில் வாங்கலாம்.’

அவ்வளவுதானா?’

‘மேலும் ஈடாக 10,000 ராண்டுகள் பணமாகத் தருகிறோம். விசயம் எங்களுடனேயே இருக்கட்டும்.’ ‘அவ்வளவுதானா?’

‘என்ன எதிர்பார்க்கிறீர்கள், அம்மையாரே.’

‘உம்முடைய பணம் யாருக்கு வேண்டும்? இந்த தவளையை என்ன செய்வதாக உத்தேசம்?’

அப்பொழுதுதான் மனேஜர் திரும்பிப் பார்த்தார். கண்ணாடிக் குவளைக்குள் நீண்ட பின்னங்கால்களுடனும், பிதுங்கிய கண்களுடனும் பச்சை நிறத் தவளை ஒன்று குந்தியிருந்தது. ஒரு கண் மேற்கே பார்த்தது. மறு கண் கிழக்கே பார்த்தது. அதன் அளவைப் பார்த்து மனேஜருக்கு சிரிப்பு வந்தது. ஓர் அங்குலம் நீளம்கூட இல்லை.

தவளைக்கு சம்பாசணை தன்னைப்பற்றி என்று தெரிந்திருக்கவேண்டும். தாடையை உப்பி உப்பி வேடிக்கை காட்டியது. ‘இந்த தவளையை பாரும். தண்ணீருக்குள் தோலினால் மூச்சுவிடும். வெளியே இருக்கும்போது சுவாசப்பையினால் மூச்சு விடுகிறது. இது அழிவின் விளிம்பில் உள்ள அபூர்வமான பிக்கர்கில்ஸ் ரீட்தவளை. இந்த இனம் பூமியிலிருந்து மறைந்தால் மனிதர்களுக்குத்தான் நட்டம். 10,000 ராண்டுகள் அந்த நட்டத்தை தீர்க்காது.

இடுப்பிலே கைகளை வைத்துக்கொண்டு மேல் உதட்டைச் சுழித்தபடி கிழவி மனேஜரை உற்றுப் பார்த்தார். மனேஜருக்கு நடுக்கம் தொடங்கியது. பணிவான குரலை வரவழைத்துக்கொண்டு 'நான் என்ன செய்யவேண்டும்?' என்றார்.

‘இந்த தவளையை அது எங்கே இருந்து வந்ததோ அங்கே கொண்டுபோய் விடவேண்டும். வேறு யாருமல்ல. நீர் செய்தால்தான் எனக்கு திருப்தி.’

மனேஜர் கண்ணாடிக் குவளையுடன் தவளையை எடுத்துக்கொண்டார். 300 மைல் தொலைவிலிருந்த ஒரு விவசாயியின் தோட்டத்திலிருந்து அந்த தவளை வந்திருந்தது. கிழவிக்கு எங்கே தெரியப் போகிறது என்று அவர் தவளையை

( 30 ஆம் பக்கம் வருக )

## பார்த்தி கந்தவேள் ரொறன்ரோ நகரசபையின் புதிய உறுப்பினர்



ரொறன்ரோ நகர - சபையின் இருபதாம் வட்டாரத்துக்கு கடந்த மாதம் மூன்றாம் திகதி இடம்பெற்ற இடைத்தேர்தலில் திரு. பார்த்தி கந்தவேள் வெற்றி பெற்றார். ரொறன்ரோ கல்விச்சபையின் அறங்காவலராக (Trustee) முன்னர் பணியாற்றிய இவருக்கு 4,641 வாக்குகள் கிடைத்தன. இரண்டாவது இடத்துக்கு வந்த கெவின் ரூபசிங்க 3,854 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் இருபதுக்கும் அதிகமா - னோர் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

1988ம் ஆண்டிலிருந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக இந்த வட்டாரத்தில் வாழ்ந்துவரும் பார்த்தி கந்தவேள் இத்தொகுதியிலேயே ஆசிரியராகவும் கடமையாற்றியவர். எட்டு வருடங்கள் கல்விச்சபை அறங்காவலராகவும் பணியாற்றியுள்ளார். ரொறன்ரோவின் நகரமாதா (மேயர்) ஒலிவியா செள அவர்களுடன் தாம் இணைந்து பணியாற்றவுள்ளதாக பார்த்தி கந்தவேள் வெற்றியின் பின்னர் தெரிவித்துள்ளார்.

## ஒன்ராறியோ கிச்சினர் மத்திய தொகுதி பசுமைக் கட்சிக்கானது



ஒன்ராறியோ மாகாண சபையில் கிச்சினர் மத்திய தொகுதியில் கடந்த மாதம் முதல் வாரம் இடம்பெற்ற இடைத்தேர்தலில் பசுமைக் கட்சியைச் சேர்ந்த அசிலின் கிளான்சி வெற்றி பெற்றுள்ளார். இவரது வெற்றியை அடுத்து ஒன்ராறியோவில் பசுமைக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது. இவர் இதற்கு முன்னர் கிச்சினர் மத்தி நகரசபையின் உறுப்பினராக இருந்தவர்.

2018ம் ஆண்டுவரை லிபரல் கட்சியின் வசமாக இருந்த இந்தத் தொகுதி கடந்த தேர்தலில் என்.டி.பி.யின் கைக்கு மாறியது. ஆனால் இத்தொகுதியின் மாகாண சபை உறுப்பினராக இருந்த லோரா மே லின்டோ கடந்த ஜூலையில் பதவியை ராஜினாமா செய்ததால் இங்கு இடைத்தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் என்.டி.பி. இரண்டாம் இடத்துக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

## பொனி குறொம்பி ஒன்ராறியோ மாகாண லிபரல் புதிய தலைவர்



மிஸிஸாகாவின் நகர முதல்வராக கடமையாற்றி வந்த பொனி குறொம்பி கடந்த மாதம் ஒன்ரா - றியோ மாகாண லிபரல் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். மிஸிஸாகா - ஸ்ரீட்வில் தொகுதியின் நாடாளு மன்ற உறுப்பினராக முன்னர் பணியாற்றிய இவர், மிஸிஸாகாவின் நகர முதல்வராக மூன்று தடவைகள் தொடர்ந்து தெரிவாகி கடமையாற்றினார். லிபரல் தலைவர் பதவிக்கு இவரை எதிர்த்து மூன்று மாகாண சபை உறுப்பினர்கள் போட்டியிட்டிருந்தனர்.

இந்த வருடத்துக்கான மிஸிஸாகா நகர - சபையின் வரவு செலவுத் திட்டத்தை அதிகாரபூர்வமாக நிறைவேற்றிய பின்னரே நகரமுதல்வர் பதவியை ராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். இடைத்தேர்தல் ஒன்றினூடாக ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினராக இவர் வருவாரா அல்லது அடுத்த தேர்தல்வரை லிபரல் கட்சியை வளர்த்து முன்னணிக்கு கொண்டு வருவதில் ஈடுபடுவாரா என்பது இதுவரை அறிவிக்கப்படவில்லை.

---

# மகிழ்ச்சியான, விரைவான, அதிகம் பேசப்படும் மொழிகள்

இன்று உலகில், 6,500க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப் - படுகின்றன. 'மொழிகளின் உண்மையான தொடக்கம் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலமாக இருக்கலாம்' என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

உலகின் தொன்மையான மொழிகள் பல இருந்தாலும், இன்று பயன்பாட்டில் இருக்கும் மொழிகளாக லத்தீன் - ஆர்மேனியன் கொரியாவின் - ஹீப்ரு அரபிக், சீனம், கிரேக்கம், எகிப்து, தமிழ் மட்டுமே இருக்கின்றன.

இதில், தமிழ் மொழி, 5,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. உலகிலேயே இடமிருந்து வலமாக எழுதப்படும் தொன்மையான மொழி தமிழ் மட்டுமே. அதே வேளையில் பேசும்போது குறைந்த அளவு காற்று வெளிப்படும் ஒரே மொழியும் தமிழ் தான்.

உலகிலுள்ள பிரபலமான மொழிகளில் ஆற்றல் மிக்க மொழி எது என்பதை கண்டறிய புவியியல், பொருளாதாரம், தகவல் தொடர்பு, பொது அறிவு மற்றும் ராஜ்ய உறவு ரீதியாக ஆதிக்கம் செலுத்தி வருவதன் அடிப்படையில் மதிப்பெண் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அதில், அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்தது ஆங்கில மொழி தான். இதையடுத்து சீன-மாண்டிரின், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபு, ரஷ்யன், ஜெர்மன், ஜப்பான், போர்த்துக்கீசிய மற்றும் ஹிந்தி மொழிகள் உள்ளன.

உலகின் மிகவும் மகிழ்ச்சியான மொழியாக, ஸ்பானிஷ் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். கற்பதற்கு எளிதாக உள்ள ஸ்பானிஷ் மொழியில்தான் மிக அதிகமாக நேர்மறையான 'பொசிட்டிவ்' வார்த்தைகள் உள்ளன. இதையடுத்து, போர்த்துக்கல், ஆங்கிலம், இந்தோனேஷியா, பிரெஞ்ச், ஜெர்மன், அரபிக், ரஷ்யன், கொரிய மற்றும் சீன மொழிகள் உள்ளன.

உலகிலேயே மிக வேகமாக பேசக் கூடியது ஜப்பானிய மொழி - யில், ஒரு நிமிடத்தில் 782 வார்த்தைகள் பேச முடியும். இதையடுத்து ஸ்பானிஷ் 780 வார்த்தைகளையும், பிரெஞ்ச் 718 வார்த்தைகளையும், ஆங்கிலத்தில், 220 வார்த்தைகளையும் பேச முடியும்.

( 11 ஆம் பக்கம் வருக )



கனகேஸ்வரி நடராஜா

# நேர தானம்
# The Gift of Time

**'One of the best gifts you can give another is the gift of your time"**
- Sunny Brook Foundation.

“வேறொருவருக்கு நீங்கள் வழங்கக்கூடிய அதிபெறுமதியான தானம் உங்கள் நேரமே” என்பது சனி புறூக் அமைப்பின் வாசகத்தினது தமிழாக்கம்.

கனடாவின் மிகச் சிறந்த வைத்திய நிறுவனமான சனி புறூக் வைத்தியசாலையின் தாரக மந்திரம் இது. இதனை பார்த்த பின்னரே இப்படியும் ஒரு தானம் இருக்கிறதா என சிந்திக்க நேர்ந்தது. தானங்கள் பலவகைப்படும். நாங்கள் முன்னர் கேள்விப்பட்டிராத பலவகைத் தானங்களை கனடாவில் கேள்விப்படுகிறோம்.

உடலுறுப்புகளைத் தானம் செய்தல், உடைமைகளைத் தானம் செய்தல், நிதியைத் தானம் செய்தல் என்று பலவகை உண்டு. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தர்மங்களுக்கு நிதி வழங்கும்போது அத்தகைய செயல்களை ஊக்கவிப்பதற்காக வருமான வரி விதிவிலக்கு வழங்கப்படுகிறது. சிலர் வரிப்பளுவிலிருந்து தப்புவதற்காக தாராளமாக நன்கொடைகள் வழங்குவதுண்டு. உலகின் ஏதாவதொரு பகுதியில் இயற்கை அனர்த்தம் அல்லது போரின் தாக்கம் நிகழும்போது கனடியர்கள் தாராளமாக உதவிகள் வழங்குவதை தமது கடமையாகக் கருதுகின்றனர்.

தங்கள் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே குறிப்பிட்ட சில நேரத்தை தொண்டர் சேவைகளுக்கு வழங்கும் பழக்கத்தை பெற்றார் ஊக்குவிக்கின்றனர். இரண்டாம்நிலைப் பாடசாலையை பூர்த்தி செய்ததற்கான சான்றிதழைப் பெறுவதற்கு மாணவர் கட்டாயமாக நாற்பது மணித்தியாலங்கள் தொண்டர் சேவை செய்திருக்க வேண்டும். அதாவது நாற்பது மணித்தியாலங்களை தானம் செய்ததற்கான அத்தாட்சி வேண்டப்படுகிறது. பல மாணவர்கள் நாற்பது மணித்தியாலத்துடன் தொண்டர் சேவையை நிறுத்தி விடுவதில்லை. நூற்றுக்கணக்கான மணித்தியாலங்களை தொண்டர் சேவைக்காக அர்ப்பணிக்கின்றனர். தமது சேவையின் நேரமும் சமூகத்துக்கு பயன்படுகிறது என்ற நல்லெண்ணமும் நற்பழக்கமும் இதனால் மாணவர் மனதில் ஏற்படுகிறது.

இங்கு பல்கலைக்கழகங்கள் செல்வதென்றாலும், பல்வேறு கற்கை நெறிகளை பின்பற்ற வேண்டுமென்றாலும் மாணவர் தங்கள் சுயவிபர அறிக்கைகளை (Bio data) கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் ஆற்றிய தொண்டர் சேவைக்கும் அதன் மூலம் அவர்கள் பெற்ற அறிவுக்கும் அனுபவத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவர்கள் வழங்கிய நேர தானம் எவ்வகையில் இவர்களின் கற்கை நெறிகளுக்கு உதவும் என்பதுவும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. இவர்கள் தொண்டர் சேவை ஆற்றிய அமைப்புகள் சிலவேளைகளில் இவர்களுடைய படிப்பு முடிந்த பின்னர் வேலை வாய்ப்புகளை வழங்கும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்திக் கொடுப்பதுண்டு. நேரம் பொன்னானது. இதனை கவனமாகவும் பிரயோசனமாகவும் கழிக்க மாணவர்கள் சிறுவயதிலேயே உணர்ந்து கொள்கிறார்கள்.

தொண்டர் சேவை செய்வதற்கு இந்நாட்டில் ஏராளமான வாய்ப்புகள் உண்டு. முதியோர் அமைப்புகள், சமயம் சம்பந்தமான அமைப்புகள், மருத்துவமனைகள், பாடசாலைகளின் பெற்றோர் சங்கங்கள், மாணவர் மன்றங்கள், ஊடக நிறுவனங்கள் என இவை காணப்படுகின்றன. அநேகமான அமைப்புகளை போட்டி அடிப்படையில் தொண்டர்களே இயக்குகின்றனர். சில அமைப்புகளில் தொண்டராகப் பணியாற்றுவதற்கு பல மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது. மூத்தோர், சேவைகளிலிருந்து இளைப்பாறியோர் மட்டுமன்றி இளம் வயதினரும் தங்களுக்கான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை இதற்கென ஒதுக்கி சமூகத்தை வளப்படுத்துகிறார்கள்.

சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற பலர் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்காது தம்மால் இயன்றளவுக்கு தன்னார்வத் தொண்டுப் பணிகளை செய்வதை பல இடங்களில் காண்கிறோம். பெருமளமானவர்கள் மருத்துவமனைகளிலேயே சேவை புரிகின்றனர். இங்குள்ள மருத்துவமனைகள் மிகவும் பெரியவை. நோய்வாய்ப்பட்டு அச்ச மனநிலையோடு மருத்துவமனைகளுக்குச் செல்லும் பொழுது அதன் வாசலிலேயே எம்மை இன்முகத்தோடு வரவேற்று நாம் செல்ல வேண்டிய இடத்துக்கு வழிகாட்டி அழைத்துச் செல்பவர்கள் தொண்டர்களே.

மருத்துவமனைகளுக்குச் செல்லும்பொழுதுதான் இந்தப் பணியின் அருமை புரியும். அதனாற்தான் சனி புறூக் மருத்துவமனை தனது தாரக மந்திரமாக நேர தானத்தை முக்கியத்துவப்படுத்தியுள்ளது. பல்வேறு அமைப்புகளில் தங்கள் நேரத்தை தானம் செய்யும் தொண்டர்களுக்கு அந்த அமைப்புகளின் ஊடாக ஒன்ராறியோ அரசு தன்னார்வத் தொண்டர் சேவை விருதுகளை வருடாவருடம் வழங்கி வருகிறது. ஒரே அமைப்புக்கு ஐந்து, பத்து, இருபது, முப்பது வருடங்கள் என்று ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் இந்த விருது வகைப்படுத்தப்பட்டுள்ளது. இளையோருக்கு இரண்டு வருட தொண்டுப் பணிக்கு விருது வழங்கப்படுகிறது.

இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக தாயகத்திலுள்ளவர்களோடு நாம் தொடர்பு கொள்வது மிகவும் சுலபமாக உள்ளது. இந்த வசதியைப் பயன்படுத்தி அங்கு ஆங்கில மொழியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இங்குள்ள முதியோர்கள் வட்ஸ் அப் மூலம் வகுப்புகளை நடத்த ஆரம்பித்துள்ளனர். ஒவ்வொரு வாரமும் சராசரியாக மூன்று, நான்கு மணித்தியாலங்களை இந்த சேவைக்காக ஒதுக்குவது இப்போது சாதாரணமாகிவிட்டது.

அது மட்டுமன்றி இங்குள்ள எமது இளம் தலைமுறையினர் கணினி வகுப்புகளையும் இலவசமாக வட்ஸ் அப் மூலம் தாயகத்திலுள்ள மாணவர்களுக்கு நடத்துகிறார்கள். இவ்வாறு தங்கள் நேரத்தை தானம் செய்வதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்கிறார்கள். சிறுபிள்ளைகள் தொடக்கம் முதியோர்வரை “நேரமில்லை, நேரமில்லை” என்று முறைப்பட்டவாறு இருக்கும் இன்றைய காலகட்டத்தில், தங்கள் நெருக்கடிகளுக்குள்ளும் பிறரின் நலனுக்காக தங்கள் நேரத்தை தானம் செய்யும் இவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.



இரா. சம்பந்தன்

# இந்திர விழாவும் இரண்டு காப்பியங்களும்!

அன்று ஒலிபெருக்கி இல்லை. அச்சு அமைப்புகளும் இல்லை. அரசு ஆணைகளையும் பிற செய்திகளையும் மக்களுக்கு அறிவிக்க யானையின் பிடரியிலே நெய் பூசப்பட்ட பெரிய முரசத்தை ஏற்றி வைத்து வள்ளுவன் என்று சொல்லப்படும் குற்றமற்ற பணியாள் அதனைக் குறுந்தடி கொண்டு அடித்து ஒலியெழுப்பி மக்களைக் கூடச்செய்து தகவல்களைப் பரிமாறிக் கொண்டான்.

மணிமேகலை நூலிலே இந்திரவிழா கொண்டாட்டத்துக்கான அரசு அறிவித்தல்கள் அவ்வாறு பகிரப்பட்டதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. செய்திகள் பகிரப்பட்ட விதம் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் ஒரு விழா எப்படி நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்ட செய்திகள்தான் விழுமிய சமுதாயம் ஒன்றை எமது மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

முதலில் குடிமக்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்-படுகின்றது. வீதிகளில் தோரணங்களைக் கட்டுங்கள். வாசல்களிலே பூரண கும்பம் வையுங்கள் பெண்கள் கைகளில் ஏந்துவது போன்ற பாவை விளக்குகளை அழகுற ஏற்றுங்கள். காய்த்த குலையோடு கூடிய கமுகும் தென்னையும் கரும்போடு நட்டு வையுங்கள். திண்ணைகளுக்கு மேலுள்ள தூண்களில் முத்துமாலைகளை தொங்க விடுங்கள். வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை அகற்றிவிட்டு புது மணலைக் கொண்டுவந்து பரப்பி வையுங்கள். தொடர் கொடிகளையும் கம்பங்களை நட்டுத் தனிக் கொடிகளையும் பறக்க விடுங்கள்.

தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்
கதலிகைக் கொடியும் காழ்ஊன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்

அடுத்து மதவாதிகளுக்கான அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் கோவில் முதல் சிறிய தெய்வமான சதுக்க பூதம் வரையுள்ள கோவில்கள் பல இங்கே இருக்கின்றன. அவற்றின் வழிபாட்டு முறைகள் வேறுபட்டவை. அவற்றின் மரபுகளை நன்றாகத் தெரிந்தவர்கள் அந்தச் சமய-நெறிகளின் பிரகாரம் பூசைகளைச் செய்து கொள்ளுங்கள்.

நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம்ஈ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறுஅறி மரபின் அறிந்தோர் செய்யுமின்

அடுத்து கல்வியறிவு படைத்த சான்றோர்கள் இதைக் கேளுங்கள். குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரநிழல்களிலும் கூடியிருக்கின்ற மக்களுக்கு புண்ணிய நல்லுரைச் சொற்பொழிவுகளை நீங்கள் ஆற்றுவீர்களாக. அது போல எனது சமயம் பெரிது எமது கொள்கைதான் நல்லது என்று பட்டிமன்றம் செய்ய நினைப்பவர்கள் நீங்கள் வாதிட்டுத் தீர்வு காண்பதற்கு ஏற்ற இடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களை அறிந்து அங்கு சென்று பேசிக் கொள்ளுங்கள். மற்ற இடங்களில் இடையூறு செய்வது குற்றமாகக் கருதப்படும்.

தண்மணல் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்உரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்குஅறிந்து ஏறுமின்

இறுதியாக அனைவரது கவனத்துக்கும் உரிய செய்தி இது. இந்த இந்திரவிழா நடக்கின்ற இருபத்தியெட்டு நாட்களும் பல ஊர்களிருந்தும் பிற தேசங்களில் இருந்தும் பலரும் வந்து கூடுவதால் கருத்து வேற்றுமைகள் எழும். ஆதனால் மனிதருக்கு மனிதர்கள் பிடிக்காமல் போகலாம். சிலருடைய செயல்களால் கோபமும் ஏற்படும். அப்படியான சூழ்நிலை வரும் போது நீங்கள் பொறுமையாக அந்த இடத்தைவிட்டு விலகிச் சென்று வீணான வாக்குவாதத்துக்கும் கலவரத்துக்கும் இடம்கொடுக்காமல் நடந்து கொள்ளுங்கள்.

பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்

அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு தமிழ் அரசாங்கம் மிகப்பெரும் விழா ஒன்றினை ஒரு மாதம் வரை நடத்தத் திட்டமிடும் போது எவற்றையெல்லாம் முன்னெச்சரிக்கையாகச் செய்து கொண்டது என்பதற்கு மணிமேகலைக் காப்பியத்தின் இந்த விழாவறை காதை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இனிச் சிலப்பதிகாரம் இந்திரவிழா பற்றிச் சொல்லும் போது அந்த விழாவை முன்னிட்டு போரிலே தோற்றுக் கைதிகளாக இருந்த பிற மன்னர்கள் விடுதலை செய்யப்பட்ட கருணை மிகுந்த செயல்களும் அந்நாளில் நிகழ்ந்தன என்று குறிப்பிடும்.

கொடித் தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித் தளை நீக்க அருள் சிறந்து ஒருபால்

இத்தனை சிறப்பாக அரசு இயங்கியும் தீயவர்களும் நாட்டிலே இருந்தார்கள் என்று பட்டியல் இடும் சிலப்பதிகாரம்.தவ வேடம் தரித்துக் கொண்டு தீயன செய்பவர்கள் இருந்தார்கள். கள்ளத் தொடர்புடைய பெண்கள் இருந்தார்கள். அரசுக்கு குழி பறிக்கும் மந்திரிகள் இருந்தார்கள். அடுத்தவன் மனைவியை விரும்பும் ஆடவர்கள் இருந்தார்கள் பொய்ச்சாட்சி சொல்ல ஆட்கள் இருந்தார்கள். புறம் கூறித் திரிபவர்களும் இருந்தார்கள்.

தவம் மறைந்து ஒழுகும் தன்மை இலாளர்
அவம் மறைந்து ஒழுகும் அலவல் பெண்டிர்
அறைபோகு அமைச்சர் பிறர் மனை நயப்போர்
பொய்க் கரியாளர் புறங்கூற்றாளர்

இவ்வாறு இந்திரவிழாவின் ஒரு பக்கத்தைச் சிலம்பும் மறுபக்கத்தை மணிமேகலையும் அழகாக எடுத்துக் கூறுகின்றன.



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 69

## மகனைப் பெற்றதும் பெரியவளாகி விட்டாயோ!

ஒரு தகப்பன் தன் முதல் குழந்தையின் மீது கண்களை வைக்கும்போது, அவன் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் வித்தியாசமானவை. மகிழ்ச்சி, பிரமிப்பு, புதிதாகத் தோன்றும் பொறுப்புணர்வு என்பவற்றால் நிரம்பிய தருணம் பிறந்திருக்கும் அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சு தனது குடும்பத்தின் குலக்கொழுந்து, தன் சொந்த வாரிசு என்னும் உணர்வுடன் அதனை நெருங்குகின்றான்.

பிஞ்சுக்குழந்தையைப் பார்க்கும்போது, அவனுடைய இதயத்தில் பாசம் பெருக்கெடுத்து, உடனடியாக ஒரு பிரிக்க முடியாத பிணைப்பை உருவாக்குகிறது. அந்த விலைமதிப்பற்ற சொத்தைப் பெற்றெடுத்தவள் அதனைப் பக்கத்தில் வைத்துப் படுத்திருக்கும் - போது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட விவரிக்க முடியாத தொடர்பை உணர்கிறான். அவனுக்கு அவளிடம் ஏதாவது பேசவேண்டும் போல் இருக்கின்றது. தனக்கு இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கும் பெருமிதமும் உணர்ச்சிகளும் அவளுக்கும் ஏற்பட்டிருக்கும் என நம்புகிறான். அந்த ஆண்மகனின் உணர்ச்சிகளை அவன் தன் நண்பனுக்குக் கூறுவதுபோல் கவிதையில் வடித்துத் தருகின்றார் உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் என்னும் சங்கத்தமிழ்ப் புலவர்.

வாராய் பாண நகுகம் நேரிழை
கடும் புடைக் கடுஞ் சூல் நம் குடிக்கு உதவி
நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்
விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள் குறுகி
“புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து அவ் வரித்
திதலை அல்குல் முது பெண்டு ஆகி
துஞ்சுதியோ மெல் அம் சில் ஓதி” என
பல் மாண் அகட்டில் குவளை ஒற்றி
உள்ளினென் உறையும் எற் கண்டு மெல்ல
முகை நாண் முறுவல் தோற்றி
தகை மலர் உண்கண் கை புதைத்ததுவே.
நற்றிணை 370

வருக பாண! சிரித்து மகிழ்வோம். இந்தப் பெண் சுற்றம் சூழ்ந்திருக்க தன் முகலாவது கருவைப் பெற்றெடுத்து
எமது குடிக்கு உதவுவளாய் நெய் நிறைந்த வெண்கடுகுத் திரள் வீடெங்கும் ஒளிபரப்ப
பந்தல் கால் நிறுத்தி விளங்கும் வீட்டில்
படுத்திருக்கும் அவளை நெருங்கி
”புதல்வனைப் பெற்றவள் என்னும் பெயரைப் பெற்று தேமல் படர்ந்த அடிவயிறு உடைய முது பெண் ஆகி உறங்குகின்றாயோ” என்று மெல்லக்கூறி சிறப்பு பொருந்திய அவளது வயிற்றைக் குவளைப்பூவால் வருடிக்கொடுத்தேன். அவள் நினைவாகவே இருக்கும் என்னைக் கண்டவுடன் மெல்லிய வெட்கப் புன்னகையைச் சிந்தி விழுங்கும் மலர்க்கண்களைத் தன் கைகளில் புதைத்தாள்”

## Have you become a mature lady after delivering a son?

"When a father sets eyes on his first child, a multitude of emotions rush through his heart. It's a moment brimming with joy, awe, and a newfound sense of responsibility. Proudly embracing fatherhood, he approaches the newborn with a sense of belonging to the family lineage and as its inheritor. Witnessing the toddler, an overwhelming affection swells within him, instantly forging an inseparable bond. An indescribable connection, beyond mere words, emerges as he lays eyes on the woman who brought this precious gift into the world, lying beside the child. It's as if he longs to share something with her, hoping she'll share in the same pride and passion he feels now. The Sangam Tamil poet Uraiyur Kathuvai Chatanar beautifully encapsulates these sentiments in his poetry, echoing the feelings of this man to his friend."



"Welcome, Bard! Let's share laughter. This girl, wearing fine jewelries and cradling the newborn to help our clan, is nestled among her relatives in a house illuminated by the soft glow of white mustard oil. Approaching her and delicately caressing her belly with a lily flower, I asked in a tender manner if she was sleeping as she had achieved the status of a mature lady with marks on her abdomen from giving birth to a son. Upon seeing me, someone who always carries her thoughts, she responded with a shy smile and then shyly buried her flowery, captivating eyes in her hands." (Natrinai 370)

# மகிழ்ச்சியான, விரைவான, அதிகம் பேசப்படும்....

( 08 ஆம் பக்கம் தொடர் )

உலகிலேயே அதிக மக்களால் பேசப்படுவது, சீனாவின் அதிகா - ரப்பூர்வ மாண்டிரின் மொழி. இதை 96 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பேசுகின்றனர். இதையடுத்து, ஆங்கில மொழியை, 44.6 கோடிக்கும் மேற்பட்டோர் பேசுகின்றனர்.ஆங்கில மொழியை பேச, இடது புற மூளை மட்டுமே வேலை செய்யும். ஆனால், சீன மொழியை பேசும்போது, வலது மற்றும் இடது புற மூளை இரண்டுமே வேலை செய்யும். ஆங்கில மொழியை அடுத்து, உலகில் அதிக மக்களால் பேசப்படுவது மற்றும் அதிக நாடுகளில் போதிக்கப்படுவது பிரெஞ்சு மொழியே. அடிப்படையில் கொரிய மொழி ஒன்று தான் என்றாலும், வட கொரியா மற்றும் தென் கொரியாவில் பேசும் கொரிய மொழிக்களுக்குள் நிறைய வித்தியாசம் உண்டு. உலகிலேயே மிகவும் குறைந்த வார்த்தைகள் கொண்ட மொழி தென் அமெரிக்க சுரிநாமில் ஒரு பகுதியில் பேசப்படும் பாக்கி- டாக்கி தான். இதில், 340 வார்த்தைகள் தான் உள்ளது.

ஐ.நா. சபையின் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றான அரபு மொழி உலகின் எந்த மொழியின் கலப்பு இல்லாமல் இருப்பதே இதன் தனித்தன்மை. இந்த மொழியில் அதற்கு சொந்தமான வார்த்தைகள் மட்டும் 1.23 கோடி. ஆனால், உலகின் பல்வேறு மொழிகளில் அரபு மொழி கலப்பு உள்ளது.



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 8

கடந்த வருடம் தை மாதம் பொங்கல் பண்டிகையை யாழ்ப்பாணத்தில் கொண்டாடினேன். எத்தனையோ பிரச்சனைகளுக்கு மத்தியிலும், அங்கு தைப்பொங்கல் பண்டிகையானது ஒருவகை மகிழ்ச்சியின் அடையாளக் கொண்டாட்டமாகத் தொடர்கிறது என்பதை அக்காலப்பகுதியில் நன்கு உணரக்கூடியதாக இருந்தது. கோலம்போட்டு, நிறைகுடம் வைத்து, சூரிய வணக்கம் செய்து யாழ்ப்பாணத்தார் தைப்பொங்கலை ஒரு கலாசார வடிவமாகவே ஆக்கி மகிழ்கின்றனர். இந்துக் கோயில்கள் மட்டுமல்ல சில கிறிஸ்தவ தேவாலயங்களும் அன்றைய தினம் நிரம்பியிருந்தன. சனசமூக நிலையங்களிலும் பொங்கினார்கள். அரசாங்க விடுமுறை தினமான பொங்கல் தினத்தன்று கடையைத் திறந்து வைத்து வியாபாரமும் செய்துகொண்டிருந்தார்கள். “இன்று விடுமுறையல்லவா!” என்று நான் வியப்புடன் கேட்டபோது அதற்கு ஒரு கடைக்காரர் “இதுதானே எங்கடை பாரம்பரியப் பண்டிகை. எங்கடை ஆக்கள் அதை நல்லாக் கொண்டாடவேணுமெண்டதால எங்கடை கடை திறந்துதானிருக்கும்.” என்றார். உணவகங்கள், சினிமாத் தியேட்டர்கள் திறந்திருக்கும் நிலையில் நுகர்வோருக்கான பொருட்களை விற்கும் கடைகள் மட்டும் ஏன் தமது சேவைகளை மறுத்து மூடப்பட்டிருக்க வேண்டும் என்ற அவரது கேள்வி சிந்திக்க வைத்தது.

அதைப்பற்றியெல்லாம் இந்த தொடரில் எழுதவேண்டும் என நான் நினைத்துக் கொண்டிருந்த வேளையில்தான் என்.டி.பி. கட்சித் தோழர் ஒருவர் தொலைபேசியில் அழைத்தார். சென்ற இதழில் நல்லூர் கோயில் குறித்து இத்தொடரில் எழுதப்பட்ட கட்டுரையை அவர் படித்துவிட்டிருந்த காரணத்தால் “என்ன.. கோயில்களைப் பற்றியெல்லாம் எழுத ஆரம்பித்துவிட்டீர்கள்?” என்று வேடிக்கையாகக் கேட்டார். கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டவர்கள் தம்மை முற்போக்குவாதிகள் என்று நினைத்துவருவதைக் கிண்டலடிப்பதற்காக அவர் அப்படிக் கேட்கிறார் என்பதைப் புரிந்து, நானும் சிரித்துக்கொண்டே “நான் ஒரு கொன்ஸவேடிவ்” என்று பதிலுறுத்தேன். அதன்பின்தான் யோசித்தும் பார்த்தேன். யார் கொன்ஸவேடிவ்கள்? யார் முற்போக்குவாதிகள்? யார் பிற்போக்குவாதிகள்?

தம்மை முற்போக்குவாதிகள் எனத் தாமே அழைக்கும் பலர் கொன்ஸவேடிஸம் என்ற கருத்தியலைப் பிற்போக்குவாதம் என்று சொல்லிவருவதைக் கேட்டிருக்கிறோம். அட.. எது பிற்போக்குவாதம்? கொன்ஸவேடிஸம் ஒரு கலாசார, சமூக, அரசியல் தத்துவமாகும், அது சமூகத்தின் பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மக்கள் கைக்கொண்டுவந்த மரபுகள் மற்றும் மதிப்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் முயல்கிறது. அதனால்தான் அது பழமைவாதம் என்றழைக்கவும்படுகிறது. உண்மையில் அதனை மரபுவாதம் என்றழைப்பதுதான் பொருத்தமானதாயுமிருக்குமோ. மேலும், மதநம்பிக்கைகளும் அதனோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதால் மார்க்ஸிய, லெனினிஸ, ஸ்டாலினிஸ, குருச்சேவிஸ, மாவோவிஸ சிந்தனைகொண்டவர்கள் பலரும் கொன்ஸவேடிஸத்தை தமக்கான எதிர்க்கருத்தாகவும் கருதுகிறார்கள். சரி. இவையல்ல இப்போது நான் சொல்லவருவது.

பாரம்பரிய பண்டிகை எதுவாயினும் அது ஒருவகையில் மரபுசார் பழமைவாதத்தின் கூறுதான். ஒரு பாரம்பரிய பண்டிகையானது மதச் சடங்குகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள், கொண்டாட்டங்கள், உணவு என பல்வேறு வகை அம்சங்களை தன்னகத்து இணைத்தே கொண்டாடப்படுகிறது. இன்னுமொரு அற்புதமான அம்சமாக தமிழர் பண்டிகைகள் அனைத்துமே இயற்கையின் சுழற்சியுடனும், கிரக நிலைகளுடனும் வாழ்க்கையுடனும் தொடர்புற்றவகையில் இருக்கின்றன. குறிப்பாக அவை பஞ்சாங்கத்துடன் இணைந்திருக்கின்றன. ஆங்கில நாட்காட்டியின் திகதி இலக்கத்துடன் தம்மைப் பிணைத்திருப்பதில்லை. அதனாலேயே தமிழரின் பல பண்டிகைகளுக்கு இந்து மதச் சாயம் பூசப்படுவதுமுண்டு.

உழவர் திருநாள் எனப்படும் பொங்கல் பண்டிகையும் இவ்வகையானதே. “தமிழ்ப் பண்பாட்டுக்கமைய சுற்றுச்சூழலை கொண்டாடுமொரு மரபுசார் பண்டிகைதான் தைப்பொங்கல்” என்பதை நாம் அறிவோம். சூரியனுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிப்பது, மாட்டுக்கு பொங்கல் வைப்பது என இயற்கையை வணங்குகின்ற





பண்புகளால் அது பொலிவடைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது உழைக்கும் வர்க்கத்தின் கொண்டாட்டம். அதனால்தான் அரசியல் நிலைப்பட்டு இயங்குபவர்கள்கூட அன்றும், இன்றும், என்றும் பொங்கல் பண்டிகை கொண்டாடுவதை போற்றி வருகிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரை இனம், மதம் அதற்குத் தடையாக இல்லை என்றும் சொல்லலாம். சில சிங்கள அரசியல் தலைவர்கள்கூட இப்போதெல்லாம் தமது வீட்டில் தைப்பொங்கல் கொண்டாடுகிறார்கள். தமிழ் அரசியல் தலைவர்கள பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. 2009க்கு முன்னரான காலத்தில், தமிழ்ப் படையினரும் கடுமையான போர்க்கள காலங்களிலும் தைப்பொங்கலன்று கோலம் இட்டு, புதிய பானை வைத்துப் பொங்கல் செய்தார்கள் என்ற செய்தி தமிழரின் பழைமையை, பாரம்பரியத்தைப் போற்றியதொரு முற்போக்கான விடயமாகவே இப்போது தென்படுகிறது. அதேபோல சிங்களப் படையினரும் பொங்கல் பானைகளை இனவாதம் காட்டாமல் கடந்து போன காட்சிகளும் உண்டு என்பதையும் நாமெல்லாம் மறுக்க முடியாது.

இவற்றையெல்லாம் நம்பிக்கையுடன் பார்க்கும் நிலையில் இயற்கையையோடு கலந்து நிற்கும் நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொங்கல் செய்வதற்கு சிங்களப் பேரினவாதிகள் ஏற்படுத்திய தடைகளையும் இடையூறுகளையும் நாம் மறந்தும் கடந்தும் போய்விடக்கூடாது. தொன்மத் தெய்வங்களை வழிபடும் வகையில் பொங்கல் செய்யும் உரிமை மறுக்கப்பட்டு, நம் மனதில் ஆழ்ந்த வடுவாகி ஆத்திரத்தைப் பொங்கியெழ வைத்த நிகழ்வு அது.

( 30ம் பக்கம் வருக )

# அமெரிக்க ‘ரைம்’ சஞ்சிகையின் நூறில் ஒருவர் விஞ்ஞானி எம். சஞ்சயன்

அமெரிக்க ‘ரைம்’ சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் நூறு முக்கிய ஆளுமைகளை தெரிவு செய்து அவர்களின் ஒளிப்படத்துடன் சிறப்பிதழ் வெளியிடுவது வழக்கம். இந்த வரிசையில் 2023ம் ஆண்டின் ஆளுமைகளில் ஒருவராக தெரிவாகி உலகளாவிய தமிழருக்கு பெருமை சேர்த்துள்ளார் விஞ்ஞானி எம். சஞ்சயன். ‘சர்வதேச சுற்றுச்சூழல் வளம்பேணல்’ (Conservation International) அமைப்பின் பிரதம நிறைவேற்று தலைமை அதிகாரி இவர். உலகின் பல பாகங்களுக்கும் சென்று இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதோடு ஊடகங்கள் ஊடாகவும் தொடர்ந்து இயங்கி வருபவர். இலங்கையில் பிறந்து அமெரிக்காவில் கல்வி கற்று கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவரே இத்துறை சார்ந்த ஆளுமைகளில் ‘ரைம்’ சஞ்சிகையால் தெரிவான முதலாவது தமிழர்.

சர்வதேசப் புகழ் பெற்ற எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் - கமலரஞ்சனி தம்பதியரின் ஏகபுதல்வன் சஞ்சயன். ‘ரைம் கிளைமேற்’ இதழில் இடம்பெற்ற சஞ்சயனின் செவ்வி கீழே மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.





**What sustainability effort do you hope will gain popularity with the general public this year, and why?**

What we eat and drink is a daily need. Yet much of what we consume and enjoy is threatened by climate change and, often, a leading cause of emissions. This connection between families, farmers, big agriculture, and retail offers an imperative and opportunity to engage everyone. Companies are increasingly linking food production with the protection of nature. For example, some are using conservation to increase fish stocks and putting a percentage of revenue into marine protected areas, or they are working to link palm oil production with rainforest protection. But for these efforts to go mainstream, we need pressure from consumers like you and me.

**What is a climate technology that isn't getting the attention or funding it deserves?**

There is a carbon capture tool that is well studied, immediately scalable, and boasts a 3.5-billion-year record of success: photosynthesis. We cannot plant and restore our way out of the climate crisis, but we also cannot afford to ignore nature. Around one quarter of emissions come from deforestation and land degradation. Until we cease our war on nature, we have no chance of reaching net zero — yet nature-based work receives a tiny fraction of climate finance. As scientists gain insight into the carbon cycle, we're discovering new ways to turbocharge nature's ability to capture and accelerate atmospheric carbon removals while providing many benefits to communities.

**Where should climate activism go in the next year?**

Climate activism should look south. Rich countries do not have the moral currency nor the financial flexibility to dictate to the Global South. Remember who caused this problem and continues to lead the world in per capita emissions. We cannot craft solutions that may work for us and expect others to follow in a multi-polar, desperate, and crowded world. Take carbon capture technologies, for example. Where do you think the factories or devices will be built? Who do you think will get even richer from these technologies? These innovations are necessary but will not immediately create jobs, wealth, or benefits in the Global South. Similar to the independence movement of the mid-20th century, we are seeing increased agency amongst "developing nations" to demand action on climate change. Solutions must address Global South exigencies. They must be justice-oriented and resilient.

# சுகன் சிவராஜாவின் நிர்வாகத்திலான Royal LePage Ignite நிறுவன 2023ம் ஆண்டு விருது விழாவும் ஒன்றுகூடலும்

சுகன் சிவராஜாவின் நிர்வாகத்திலான Royal LePage Ignite நிறுவன 2023ம் ஆண்டு விருது விழாவும் ஒன்றுகூடலும் கடந்த மாதம் 23ம் திகதி ஸ்காபரோ கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்றது. கலைநிகழ்ச்சிகளுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் வளர்ச்சியை திரு.சுகன் சிவராஜா சுருக்கமாக எடுத்துரைத்தார். கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகப் பங்கேற்று முக்கிய விருதுகளை வழங்கியதோடு சிறப்புரையாற்றி விழாவை மாண்பேற்றினர்.
(ஒளிப்படங்கள்: குணா - செய்தி/புதினம்)
















## அதிரனின் நயனவழி 04

# பொதுமக்கள் பூங்காவில் வீடற்றோர் கிராமம்

ரொறன்ரோ நகரிலுள்ள பூங்காக்களில் அலன் கார்டின்ஸ் மிகவும் பிரபல்யமானது. நகரின் மத்தியில் ஜார்விஸ் - கால்ரன் சந்திப்புக்கருகில் சுமார் 6,500 சதுர அடி நிலப்பரப்பில் ஆறு பசுமைத் தோட்டங்களை (Green houses) இது உள்ளடக்கியது.

1958ம் ஆண்டு ஜோர்ஜ் வில்லியம்ஸ் அலன் என்பவரால் இந்தக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டதால் அலன் குடும்பப் பெயர் இதற்குச் சூட்டப்பட்டது. 365 நாட்களுக்கான 365 வகை பூமரங்கள் வருடம் முழுவதும் பார்வையிடக்கூடியதாக பசுமைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவுக்கு முக்கியமானதாக இது உள்ளடக்கப்பட்டுள்ளமையால், ரொறன்ரோ நகரசபை இந்தப் பூங்காவை பொறுப்பேற்று நிர்வகித்து வருகிறது.

பசுமைத் தோட்டங்களுக்கு அப்பாற்பட்டதாக பெருமளவு நிலப்பரப்புடன் விசாலமான மரங்கள் இங்கு நிரம்ப உள்ளன. உச்சி வெயில் நிலத்தை எட்ட முடியாதவாறு சோலை மரங்கள் அடர்த்தியாக உள்ள இடம் இது. சமூக ஆர்ப்பாட்டங்கள், ஒன்று கூடல்கள், கண்டனக் கூட்டங்கள் என்பவற்றுக்கு இங்கு குறைவில்லை. இந்தப் பூங்காவில் எப்போதும் ஏதோ ஓர் நிகழ்வு இடம்பெறும். அத்துடன் தனியாரும் குடும்பங்களும் தினமும் நூற்றுக்கணக்கில் கூடி மகிழ்வுறுவர்.



இங்குள்ள பூங்காவில் பல வர்ண மலர்கள் நாள் முழுவதும் பூத்துக் குலுங்கிக் காணப்படும். ஆனால், கடந்த சில மாதங்களாக எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

ரொறன்ரோவில் பெரும் பிரச்சனையாக மாறி வரும் வீடற்றோருக்கான குடியிருப்புப் பகுதியாக அலன் தோட்டம் மாற்றம் பெற்றுவிட்டது. சுமார் 300 வரையான வீடற்றோர் சிறு சிறு கூடாரங்களை அமைத்து இங்கே நிரந்தரக் குடியிருப்பாளர்களாக மாறியுள்ளனர். படுக்கையறைகள், சமையல் பகுதி, விளையாட்டுப் பகுதி என்பன இவர்களால் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பலரும் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் (Wheel chairs), துவிச்சக்கர வண்டிகள் பாதுகாப்பாக அவரவர் கூடாரத்துக்கருகில் நிறுத்தப்பட்டிருக்கும். பகலும் இரவும் செஸ் விளையாட்டு, கார்ட்ஸ் விளையாட்டுகளில் பலரும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

பூங்கா பாதிப்படையக்கூடாதெனக் கருதி நடமாடும் கழிப்பறைகளை ரொறன்ரோ நகரசபை இங்கே ஏற்படுத்தியுள்ளது. நகரக் காவலர்கள் அடிக்கடி இப்பகுதியில் நடமாடி அங்கு இடம்பெறும் நடவடிக்கைகளை கண்காணிக்கின்றனர். இங்குள்ள சில கூடாரங்களில் கர்ப்பிணித் தாய்மாரும் உள்ளனர். சிலர் கணவன், மனைவி, பிள்ளைகள் என குடும்பமாக தங்களுக்குத் தனித்தனி கூடாரம் அமைத்து வசிக்கின்றனர். சிலரிடம் மோட்டார் சைக்கிள், எலக்ட்ரிக் சைக்கிள்களும் உண்டு. சாதாரணமாக ஒவ்வொருவரும் வளர்ப்புப் பிராணிகளை வைத்துள்ளனர்.

தொண்டர் நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்றவை வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் சமைத்த உணவுகளை இவர்களுக்கு விநியோகம் செய்கின்றனர். இவ்வேளைகளில் வெளியாரும் பெருந்தொகையில் இங்கு கூடுவதைக் காணலாம்.

ரொறன்ரோ நகரசபையால் வசதியான கட்டிடங்களில் இவர்களுக்கென தற்காலிக இருப்பிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் அதனை இக்கூடாரவாசிகளில் பெரும்பாலானோர் விரும்பவில்லை. வலுக்கட்டாயமாக இவர்களைக் கூட்டிச் சென்று அங்கு குடியேற்றினால், ஓரிரண்டு நாட்களில் எவ்வாறோ மீள பழைய கூடார வாழ்க்கைக்குத் திரும்பி விடுகின்றனர். ரொறன்ரோ நகரசபையினருக்கு இது தனிச்சவாலாக அமைந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான கூடாரங்களை தகர்த்தெறிந்த நகரக் காவலர்கள் இதில் வாழ்ந்து வந்தோரை தூக்கிச் சென்றனர். இவ்வேளை சிலர் தாக்கப்பட்டதாகவும் புகார் கூறப்பட்டது. அதனால் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரொறன்ரோ நகர நிர்வாகம் இப்போது விரும்பவில்லை.

பூங்காக்களை வீடற்றோர் ஆக்கிரமித்திருப்பதை அயலவர்களும் பொழுதுபோக்க விரும்புபவர்களும் ஆட்சேபித்து வருகின்றனர். வரியிறுப்பாளர்கள் என்னும் வகையில் தாங்கள் பிள்ளைகளுடன் குடும்பமாக பூங்காவுக்குச் செல்ல முடியாதிருக்கிறது என்பது இவர்களின் குறைபாடும் முறைப்பாடும். இது எவ்வாறு நிவர்த்தி செய்யப்படுமோ தெரியாது.

அலன் தோட்ட மலர்ப்பூங்காவின் ஒரு காட்சியையும் தோட்டத்தை நிரப்பி வைத்திருக்கும் வீடற்றோர் கூடாரங்களையும் இப்பக்க படங்களில் காணலாம்.





ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே ! 32

# சீனிக்குப் பொய் சொல்லாதே!

டொக்டர் ரூவன் தனது பொறுமையை இழந்து போனார். எத்தனை காலந்தான் அவரும் பொறுப்பது. கடைசிச் சந்திப்பில் கொஞ்சம் கறாராகவே பேசினார். இனிச் சரிவராது என்று கண்டிப்பாகச் சொல்லிப்போட்டார். எனது வழமையான கதையாடல் இந்தத் தடவை அவரிடம் பலிக்கவில்லை. இன்சுலின் ஏத்தியே ஆக வேண்டும் என்றார்.

ரூவன் எனது டயபிடிஸ் (நீரிழிவு) டொக்டர். அதில் ஸ்பெஷலிஸ்ட். நீரிழிவு நோய் வந்தால் எல்லா நோய்களும் வந்து சேரும் என்றும், நீரிழிவு என்பது ஒரு நோயே அல்ல, அதனை வாழ்க்கை முறையில் கட்டுப்படுத்தலாம் என்றும் செய்திகள் உலாவுகின்றன.

வாழ்க்கையை கட்டுப்படுத்த நான் ஒன்றும் யோகி இல்லையே. வாழ்வைக் கொண்டாடுவோம் என்ற கொள்கை உடையவன். அதனைப் பிழையாக விளங்கிக் கொண்டதால் வாழ்க்கை இன்சுலினில் வந்து நிற்கிறது.

நான் ஒரு சாப்பாட்டுப் பிரியன். இளவயதிலேயே கொழும்புத்துறை மீன், ஜனதா ஹோட்டல் கொத்துரொட்டி, மொக்கன் கடை புட்டு, ஆட்டிறைச்சி, ஆணம், தாமோதர விலாஸ் மசாலா தோசை, றிக்கோவின் மட்டன் றோல்ஸ் என்று சாப்பிட்டு வளர்ந்தவன். கனடா வந்த பின்னர் சொல்லத் தேவையில்லை. வெவ்வேறு நாட்டவரின் உணவு வகைகளை ஒரு பிடி பிடித்தேன்.

உணவுப் பழக்கம் என்ற நீரிழிவின் முதல் எதிரியை என்னால் கொல்ல முடியவில்லை.

நண்பர் செபஸ்ரின் சாப்பாட்டுச் சாமான்கள் வாங்க மனைவியோடு கடைக்குப் போகிறார். ஒவ்வொரு சாமானையும் எடுத்து நுணுக்கமாக இருவரும் வாசிக்கிறார்கள். எத்தனை கலோரிகள், சத்துகளின் வீதங்கள், காலாவதித் திகதி போன்றவற்றை அலசி தங்களுக்குள் ஆராய்ந்த பின்னரே சாமான்களை எடுக்கிறார்கள். நான் அப்படியல்ல. எனக்கு எல்லாமே உதயாஸ் கடைதான். ஒன்றும் வாசிப்பதில்லை. செபஸ்ரிக்கு லூஸ் என்று நினைத்துக் கொள்வேன்.

எனது குடும்ப வைத்தியர் டேவிட் சான் இனியும் என்னால் உன்னைக் கட்டுப்படுத்த முடியாது என்று ஸ்பெஷலிஸ்ட் ரூவனிடம் என்னைப் பாரப்படுத்தி இருபது வருடங்களாகிவிட்டன. அன்று வாங்கிய ட்ரெட் மில் என்ற நடை கருவியில் இன்றுவரை நான் கால் வைக்கவில்லை. கஸ்டப்பட்டு கருவியைப் பூட்டியதுதான் மிச்சம்.

நண்பர் செல்வம் தவறாமல் ஒவ்வொரு நாளும் நடக்கிறார். ஒருநாள் நடக்காவிட்டால் விசர் பிடிக்கும் என்கிறார். தள்ளாடும் நிலையில் உள்ளவர்களும் எனது ஒழுங்கையில் நடைப்பயிற்சி செய்கிறார்கள். என்னால்தான் முடியவில்லை.

எல்லாத்துக்கும் பஞ்சிதான் காரணம்.

ஆரம்பத்தில் டொக்டர் ரூவன் வருடத்துக்கு ஒரு தடவையே என்னைப் பார்த்தார். பின்னர் ஆறு மாதத்துக்கு ஒருக்கால் வரச்சொன்னார். பிறகு அது நாலு மாதமாகி இப்போ மூன்று மாதத்துக்கு ஒருமுறை வரச்சொல்கிறார். ஒவ்வொரு மாதமும் பார்க்க ஓஹிப் (சுகாதார அட்டை) இடம் கொடுக்குதோ தெரியவில்லை. சுகரின் நம்பர் கூடக்கூட பார்க்கிற இடைவெளி குறைந்து போனது.

ஒவ்வொரு நாளும் அரை மணித்தியாலம் நடக்கிறனான், இலை குழைகள் சாப்பிடுகிறனான், சீனி வாயிலும் வைப்பதில்லையென்று டொக்டருக்குச் சொல்லிக் கொள்வேன். என்னதான் முதல்நாள் பத்தியம் இருந்து, சொக்கிலேட் சாப்பிடாமல், ரின் பால் போட்டு ரீ குடிக்காமல் ரத்தப் பரிசோதனை செய்தாலும் மூன்று மாத சராசரி நம்பர் காட்டிக் கொடுத்து விடுகிறது. தப்ப முடியவில்லை.

பிராம்ரன் டயபிடிஸ் சென்ரரின் வரவேற்பறையில் காத்திருந்த என்னை ஈவா என்ற தாதி அழைத்துச் சென்றார். இது போன வாரம் நடந்தது. ஈவா அழகாக இருந்தார். இத்தாலிய நாட்டவராக இருக்கலாம். டயபிடிஸ் பற்றி எனக்கு வகுப்பு எடுக்கப் போவதாகச் சொன்னார். மூன்றாம் வகுப்பு மாணவன்போல் அவர் சொல்வதை உன்னிப்பாக நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இடையில், உனது ஒரு நாளைய சாப்பாட்டுப் பழக்கவழக்கங்களைச் சொல்லு என்றார். விடிய வீற்ஸ் சாப்பிட்டு கோப்பி குடிக்கிறனான் என்றேன். Good என்றவாறு கம்பியுட்டரில் ரைப் பண்ணத் தொடங்கினார். நான் இடைக்கிடை பாணும் பட்டரும் ஜாமும் சாப்பிடுவதைச் சொல்லவில்லை.

மதியம்.....? சோறு, மீன் அல்லது கோழி, இரண்டு மரக்கறி என்றேன். லாச்சியைத் திறந்து கோப்பையை எடுத்தார். றப்பரால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களைக் காட்டி எவ்வளவு சாப்பிடுவாய் என்று கேட்டார். சொன்னேன். ரூ மச் என்றார். கலர் கலராய் மரக்கறிகள் சாப்பிடச் சொன்னார்.

செவ்வாயும் வெள்ளியும் கோயிலில் சாப்பிடும் குழையல் சோறு பற்றியோ, இடைக்கிடை கிடைக்கும் மோதகம், பஞ்சாமிர்தம் பற்றியோ நான் வாய் திறக்கவில்லை. பின்னேரம்....? ரீ குடிப்பேன் என்றேன். அதில் நனைத்து சாப்பிடும் மலிபன் மாரி பிஸ்கட் பற்றிச் சொல்லவில்லை.

இரவுச் சாப்பாடு பிரச்சனையாகி விட்டது. வழமையாக வீட்டில் மா குழைத்து புட்டுத்தான் நடக்கும். மா குழைக்கிறது, நீற்றுப்பெட்டி எல்லாவற்றையும் எப்படி விளங்கப்படுத்துவது? பேசாமல் ரொட்டி, தோசை, சிலவேளை சிறீலங்கன் நூடில்ஸ் என்றேன் - யு மீன் ஸ்ரிங் ஹொப்பர்ஸ் என்று திருப்பிக் கேட்டார். ஓம் என்றேன். எத்தனை சாப்பிடுவாய்? வைற்றா பிரவுணா? கடையில் வாங்குவியா? சரிதான், எட்டப்பன் யாரோ எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்திருக்கிறான்.

அவருக்கு எனது பதில்களில் சந்தேகம் வந்திருக்க வேண்டும். திடீரென்று கேட்டார், டோன்ற் யு ஈற் புட்டு? எனக்குத் தலை சுற்றியது.

வகுப்பு முடிந்து வீடு வந்து சேர இருண்டு விட்டது. அன்றும் அடுப்பில் புட்டு அவிந்து கொண்டிருந்தது.

# செல்வா வெற்றிவேல் நிர்வாகத்திலான HomeLife Future Reality Inc. இருபதாவது ஆண்டு நிறைவு விழாவும் ஒன்றுகூடலும்



செல்வா வெற்றிவேல் நிர்வாகத்திலான HomeLife Future Reality Inc. நிறுவன இருபதாவது ஆண்டு நிறைவு விழாவும் ஒன்றுகூடலும் கடந்த மாதம் 24ம் திகதி ஸ்காபரோ பிரைட்டன் விருந்துபசார மண்டபத்தில் இடம்பெற்றது. வழமையான விருதுவிழாகவன்றி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் அனைவருடனுமான ஒன்றுகூடலாக இவ்விழா ஏற்பாடாகியிருந்தது. நிறுவனத்தின் இருபது ஆண்டுகால வளர்ச்சியை செல்வா வெற்றிவேல் தமதுரையில் சுருக்கமாக எடுத்துக் கூறினார். கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி சிறப்புரையாற்றினார். Prisoner # 1056 நூலின் ஆசிரியரும், கனடிய தமிழர் மத்தியில் வணிக முன்னோடி நிறைவேற்றுப் பணிப்பாளருமான திரு.றோய் ரட்ணவேல் சிறப்புரையாற்றினார்.

























(31ம் பக்கம் வருக)

# டாக்டர் செந்தில் மோகன் நிர்வாக MedCentre Health Annual Awards



ஸ்காபரோ மார்க்கம் அன்ட் மக்னிக்கல் துரித மருத்துவசேவை நிறுவனத்தை உள்ளடக்கிய MedCentre Healthன் வருடாந்த விருதுகள் வழங்கும் மதிப்பளிப்பு விழா கடந்த மாதம் 22ம் திகதி மார்க்கம் கொன்வென்சன் மண்டபத்தில் இடம்பெற்றது. கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகவும், ஒன்ராறியோ மாநில சட்ட - சபை உறுப்பினர் லோகன் கணபதி சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்று உரையாற்றியதோடு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். டாக்டர் செந்தில் மோகன் தமதுரையில் மெட்சென்ரர் ஹெல்த்தின் சேவை விபரங்களை விபரித்ததோடு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் Homecare சேவை பற்றிய தகவல்களையும் எடுத்துக் கூறினார். இங்கு பணியாற்றும் டாக்டர்களும் பணியாளர்களும் தனித்தனியாக மதிப்பளிக்கப்பட்டதையடுத்து இராப்போசனத்துடன் நிகழ்வு நிறைவேறியது.





























வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE
FOR YOU &
YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
2901 Markham Rd Scarborough, ON M1X 0B6
(Markham and McNicoll Intersection)
MORE DOCTORS, MORE CARE
MMUCC now has more doctors to serve you. Unit 11 has expanded to Unit 6 as well.
The number of doctors working in the Walk-In Clinic / Urgent Care have increased to seven (07) recently.
We will continue to open all 365 days a year. Patients Walk-In without appointment can self-register at the clinic.
The existing online booking from 12am for the same day appointment, will continue for both unit clinics as before @ medcentrehealth.com
Visit us today and experience the convenience & excellence of MEDCENTRE HEALTH
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
Walk-In Clinic (வோக் இன் கிளினிக்) மற்றும் Urgent Care (துரித மருத்துவ சேவை).
இதுவரை காலமும் Unit 11 ல் ( யுனிட் இலக்கம் 11ல்) மட்டும் இடம்பெற்று வந்த மருத்துவ சேவைகள், இப்போது Unit 6 & 11 ( யுனிட் 11 உடன் 6 ம் யுனிட்டுமாக இரண்டு யுனிட்டிகளுக்கும்) விரிவாக்கப்பட்டுள்ளது.
இந்த கிளினிக்குகளில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் ஏழாக (7) அதிகரிக்கப்பட்டுள்ளது.
வழமைபோல ஒன்லைன் (online) வழியாக முற்கூட்டியே பதிவு (Book) செய்யலாம்.
அல்லது நேரடியாக வருகை தர முடியும்.
+1 416-609-3333
medcentrehealth.com


# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

**MATRIX LEGAL SERVICES**
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**



Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO
HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:

தீபன்

24 Hours Direct Line

(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave ., Suite 202, Toronto, ON M1T 1V6

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation* • *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum)
warehouse from 139.00 per sq.feet.
உங்கள் வீட்டுடன்
இணைந்ததாக
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு
கொள்ளுங்கள் !
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# KEV TAX

KNOWLEDGE & EXPERIENCE IS VITAL

www.kevtax.com



- CORPORATE INCOME TAX
- BOOKKEEPING & ACCOUNTING SERVICES
- PERSONAL INCOME TAXES
- QUALITY SERVICE WITH REASONABLE FEES
- FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
- CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION

SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE

FREE EFILE SERVICE

Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)

TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com





List your property with me...

To Book Your Pre Construction Homes & Condo

FREE - Home Evaluation
FREE - Home Staging
FREE - Professional Photography
FREE - Social Media Marketing

HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.

HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

MLS



CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Broker

Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com




Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109, Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை

# இரண்டு

விஜய் நடித்த சர்க்கார் படம் பார்த்திருப்பீர்கள். அதில் வரும் வில்லன் ராதாரவிக்கு ரண்டு அதாவது இரண்டு என்று ஒரு பட்டப்பெயர் இருக்கும்.

அது போல எமது வாழ்வியலில் கடந்து போன ஒரு இரண்டு விடயத்தைத் தரிசிக்கப் போகிறோம்.

எமது காலத்தில் இரண்டு நேரப் பாடசாலை இருந்தது. காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரையில் ஒரு முறை பாடசாலை நடக்கும். சரியாகப் 12.30 மணிக்கு மதிய உணவு இடைவேளைக்கு ஒருமணி நேர ஓய்வு தருவார்கள். பிற்பகல் 1.30 மணிக்கு திரும்பவும் பாடசாலை தொடங்கி 3.30 மணிக்கு கல்வியை நிறைவு செய்வார்கள்.

முதலாம் வகுப்பு,இரண்டாம் வகுப்பு படிக்கும் காலங்களில் அவ் வகுப்புக்கு மட்டும் 12.30 மணியுடன் பாடசாலை நிறைவு பெறும்.

உண்மையில் இந்தப் பாடசாலை முறைதான் மாணவர்களுக்கு உடல், உள மகிழ்வைத் தந்த முறை எனலாம்.

காலை 8.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கும் போது காலை உணவை உட்கொண்ட பின்பாகத் தான் படிக்கப் போனோம். மதியம் ஒரு மணித்தியால ஓய்வு தரும் போது வீட்டிற்குச் சென்று சாப்பிட்டோம். ஓட்டமும் நடையுமான ஒரு வேகநடை இருக்கும். சட்டியில் இருக்கிறதோ இல்லையோ எப்பாடு பட்டேனும் பெற்ற பிள்ளைக்குச் சோறு கறி ஆக்கி அன்னை ஊட்டி விடுவாள்.

தூர இடத்திலிருந்து வரும்மாணவர்கள் மதிய உணவைப் பார்சல் கட்டிக் கொண்டு வருவார்கள். ஆனந்தமாக உண்டு விட்டு மைதானத்தில் சென்று விளையாடுவார்கள்.

புழுதி அளைந்து வெய்யில் குளித்து விளையாடுவது ஒரு ஆனந்தம் தான்.

விளையாடப் பஞ்சிப்பட்டவர்கள் அம்புலிமாமா , ராணிகமிக்ஸ் வாசித்து ஆனந்தப்படுவார்கள். சிறு பராய வாசிப்பு இவற்றில் தான் ஆரம்பித்தது. கற்பனைக் கதைகளுக்கு ஊடாக வரலாறுகள், நற்பண்புகள் எம் தலைமுறையை வந்தடைந்தது.

அதன் தொடர்ச்சி வாசிப்பைக் கைவிடாத ஒரு தலைமுறையாக நிற்கின்றோம்.

பாடசாலை 3.30 மணிக்கு முடிவடைந்ததும் சந்தோசமான ஒரு அன்னநடை நடந்து வருவோம். வேலி விராயெல்லாம் நோட்டமிட்டு எங்கு இலந்தைப்பழம் கிடைக்கும், எந்த வளவில் கல்லெறிந்து மாங்காய் வீழ்த்தலாம். எங்கு விளாம்பழம் பொறுக்கலாம். கொய்யாக்காய் எங்கு ஆயலாமென ஒரு டேற்றா பாங்கே வைத்திருப்போம்.

கண்ட கண்ட காய் கனியெல்லாம் திண்ட தலைமுறை என்பதால் தொற்றா நோய்கள் குறைந்ததாக வாழ்க்கை பலருக்கு அமைந்தது.

மதில்கள் தெரியாத வேலி வாழ்க்கை. பொட்டு, கடப்பு ஊடாகக் காணிகளை ஊடுருவும் வாழ்க்கை முறை. சீசீரிவி கமெரா தேவையில்லை. ஊராரின் கண்களே கமெரா வேலை செய்யும்.

பெடி பெட்டை பள்ளிக்கூடம் முடிந்ததும் எங்கு போனார்கள். என்ன செய்தார்களென ஒரு பட்டியல் வீட்டுக்கு வரும். தாய் தந்தையர் ஒரு சிரிப்புடன் அதனை ஏற்றுக் கொண்டதும் உண்டு. அதனை ஒரு பெரிய விடயமாகத் தூக்கிப் பிடித்துத் தண்டனை தந்தோரும் சிலருண்டு.

ரியூசன் ஒரு பாசனாக வராத காலம் அது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நேரம் தான் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குப் போனவர்கள் உண்டு.

மற்றும்படி பள்ளிக்கூட வாத்தியாரே இதயசுத்தியுடன் கற்பித்து எல்லாப் பிணியும் போக்கி விடுவார்.

க.பொ.த.சாதாரண தரத்துக்கு முன்பாக ரியூசன் போனால் அறிவு குறைந்தோராகப் பார்க்கப்பட்டனர்.

இரண்டு நேரப் பாடசாலை நடந்த போது சில ஊர்ப் பள்ளிக்கூடங்களில் மதிய உணவு இடைவேளையின் பின்னர் மப்பும் மந்தாரமுமாக பாடசாலை வந்த ஆசிரியர்களும் உண்டு. கண்டிப்புக் குறைந்த அதிபரிடம் தான் இது எடுபடும்.

வளர்ந்த நாடுகளில் இன்றும் இருநேரப் பாடசாலை முறை உண்டு. இது மாணவர்களது உடல் உள நலன்களை மேம்படுத்தும் என்ற கருத்துக் கல்வியியலாளர்களால் முன் வைக்கப்படுகின்றது.

ஆனால் எமது நாட்டில் 1984 ஆம் ஆண்டு இரு நேரப் பாடசாலை முறைமை மாற்றியமைக்கப்பட்டது.

காலை 8 மணிக்குப் பாடசாலை தொடங்கி பிற்பகல் 2 மணிக்கு நிறைவு செய்யும் முறைமை உருவாகியது.

உலகளாவிய ரீதியில் எரிபொருள்களின் விலைகள் அதிகரித்த போது அதனைக் கட்டுப்படுத்தும் ஒரு மார்க்கமாக ஒரு நேரப்பாடசாலை முறைமை உருவானதாகக் கூறுகின்றனர்.

இதனால் மாணவர்களது உணவுப் பழக்க வழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. காலை நேரத்தில் 8 மணிக்கு முன்பதாக உணவு உண்ண வேண்டிய தேவை ஏற்பட்டது. பலர் உணவைப் பார்சலாகக் கட்டிச் சென்று காலை நேர இடைவேளையின் போது உண்கின்றனர்.

மதிய உணவு உண்ணும் நேரமும் பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணி வரையில் நேரம் மாறியது. இது போசாக்கு மட்டத்திலும் உடல் ஆரோக்கிய மட்டத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

மதிய உணவு இடைவேளையின் போது விளையாட்டு,வாசிப்பு போன்றவற்றில் ஈடுபட்ட பழக்க வழக்கம் அற்றுப் போனது. இது பண்பாட்டு ரீதியாகப் பெரும் விழுக்காட்டை ஏற்படுத்தியது.

(30ம் பக்கம் வருக)

Tamil Canadian Centre for CIVIC ACTION

OFFICIAL THEME: TAMILICIOUS
TAMILS AND FOOD: PAST, PRESENT, & FUTURE

# 15TH Annual Tamil Heritage Month

## Tamil Heritage Month 2024 | தமிழ் மரபுத் திங்கள் 2024



**JAN 06** — **Official Opening Ceremony**
11am - 2pm @ Queen Palace Banquet Hall
தமிழ் மரபுத் திங்கள் தொடக்க விழா



**JAN 15** — **Tamil Seniors Got Talent**
7pm - 9pm on Zoom
தமிழ் முதியோர் கலை நிகழ்ச்சி



**JAN 19** — **30 Under 30 & City Hall Reception**
6pm - 9pm @ Toronto City Hall
ரொறன்ரோ நகரசபை சிறப்பு நிகழ்வு

**கருப்பொருள் விளக்கம்**

2024 தமிழ் மரபுத் திங்களுக்கான அதிகாரபூர்வ கருப்பொருளாக தமிழ்ச்சமூகத்தின் வரலாற்று ரீதியான உணவு மற்றும் அதன் உற்பத்தி, வர்த்தகம், விநியோகம் முதலான ஆராய்வுகள். இக்கருப்பொருள் தமிழரின் வாழ்வியலில் உணவு தயாரித்தல், வழங்கல், விருந்தோம்பல், தொழில்,போன்ற தமிழ் உணவு மற்றும் சமையலின் பல்வேறு கூறுகளில் கவனம் செலுத்தி ஆராயவுள்ளது. 15 வது தமிழ் மரபுத் திங்கள் ஆண்டானது தமிழரின் உணவு தெடர்பான அனைத்து தொழில்கள், தொழிலாளர்கள், மற்றும் தொழில்முனைவோர்களை பெருமையுடன் முன்னிறுத்தி மதிப்பளிக்கவுள்ளது.

தமிழ் மரபுத் திங்கள் செயலவை — TAMIL HERITAGE MONTH COUNCIL

tamilheritage@tamilcivicaction.com | tamilheritagemonth.com

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ESTD From The Community To The Community 1991

**தமிழர் தகவல் 33 ஆண்டுகள் பூர்த்தி**
**மலர் வெளியீடும் விருது விழாவும்**
**எதிர்வரும் ஏப்ரல் மாதம்**
**ரொறன்ரோ நகரசபையின்**
**அங்கத்தவர் சபாபீடத்தில்**
**வழமைபோல் இடம்பெறும்.**
**விபரங்கள் அடுத்த இதழில் !**


**Real estate excellence, every time.**

**Rajmogan** Selliah
Sales Representative

Direct: **416 569 3200**
Email: srajmogan@gmail.com

**Buy | Sell | Lease | Invest**

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555



Residential, Commercial and Investment Properties

# கிறிஸ்மஸ் தவளை...

பக்கத்து காட்டிலே எங்காவது விட்டிருக்கலாம். 300 மைல் தூரம் பயணம் செய்து தவளையின் பிறப்பிடத்தை கண்டுபிடித்து அங்கேயிருந்த குளத்தில் அதை விட்டுவிட்டு திரும்பினார்.

இந்த விசயம் எப்படியோ வெளியே கசிந்துவிட்டது. பத்திரிகை ஒன்று அந்த விவசாயியை சந்தித்து எழுதியது. இன்னொரு பத்திரிகை கிழவியை பேட்டி கண்டது. மனேஜருக்கு வாழ்த்துக்கள் வந்து குவிந் தன. நூற்றுக்கணக்கான கிறிஸ்மஸ் அட்டைகள் வந்தன. கிறிஸ்மஸ் விற்பனை முன்னெப்பொழுதும் தொடாத உச்சத்தை தொட்டதுடன் முதல் தடவையாக சுப்பர் மார்க்கெட் லாபமும் காட்டியது.

ஒரு வருடம் சென்றது. கிழவியிடம் இருந்து மனேஜருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை வந்தது. அதன் கீழே இப்படி எழுதியிருந்தார். 'தவளை எப்படி இருக்கிறது?'.

மனேஜர் பதில் எழுதினார்: 'கடந்த வருடம் நகரத்திலே தான் கிறிஸ்மஸ் கொண்டாடியதை தன் நூற்றுக்கணக்கான சந்ததியினருக்கு தவளை கதை கதையாக சொல்லிக்கொண்டிருக்கிறது.

# இரண்டு...

ரியூசன் எனப்படும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வசதியான நேர முறையாக இது மாறியது. இதனால் அவை பெரும் நிறுவனங்களாக வளர்ச்சி அடைந்தன.

2018 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தை முதன்மைப்படுத்திய மேல் மாகாணத்தில் வீதிப் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்காக பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தைக் காலை 7.30 மணியாக மாற்றினார்கள். ஆனாலும் போக்குவரத்து நெருக்கடி குறைக்கப்பட்டதாக அறிய முடியவில்லை.

மேல் மாகாணத்தைப் பார்த்து நாட்டின் ஏனைய 8 மாகாணங்களும் தமது பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தைக் காலை 7.30 மணியாக மாற்றினார்கள். பாடசாலை நிறைவடையும் நேரத்தை பிற்பகல் 1.30 மணியாக்கினார்கள்.

வீதிப் போக்குவரத்து நெருக்கடி இல்லாத மாகாணங்களில் எடுக்கப்பட்ட இந்த முடிவால் நன்மையடைந்தது தனியார் கல்வி நிறுவனங்கள் தான். பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரையில் வகுப்புகளை நடத்தி உழைக்க முடிந்தது.

மாணவர்களது காலை உணவு, ஓய்வு போன்ற விடயங்கள் பாதிக்கப்பட்டன. மாணவர்களுக்கு அல்சர் எனும் குடற்புண் நோய், மந்த போசாக்கு என்னும் பிரச்சினைகள் பரவலாக ஏற்படத் தொடங்கி உள்ளது.

இம்முறையை மாற்றியமைக்க முற்படுவோரது குரல் பெரிதாக எடுபடவில்லை. முன்னையதைப் போல இருநேரப் பாடசாலை முறைமை மீண்டும் ஏற்படுத்துவதன் மூலமாகவே கல்விச் சரிவை ஈடுசெய்ய முடியுமென்ற குரல்கள் மெல்ல மெல்ல எழுகின்றன. ஆனால் அவை அதிகார மட்டத்தில் பெரிதாக எடுபடவில்லை.

# கண்டதை மீண்டும்...

அந்த ஆத்திரம் தமிழ் மரபுடமைசார்ந்த கோபம் அல்ல. தமிழரின் மரபுரிமை சார்ந்த கோபம்.

தைப்பொங்கல் பற்றி எழுதும்போது ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பொங்கல் பற்றி இந்தக் கட்டுரையில் ஏன் குறிப்பிட வேண்டும் என்று ஒருவேளை யாராவது காரணம் கேட்டால் அதற்கும் "நான் ஒரு கொன்ஸவேடிவ்" என்றுதான் தெளிவாகப் பதில் தருவேன். காரணம் எது பழைமை, எது புதுமை, எது முற்போக்கு, எது பிற்போக்கு, யார் முற்போக்குவாதிகள், யார் பிற்போக்குவாதிகள் என்பவை குறித்த தெளிவு மதம் சார்ந்த நம்பிக்கைகளினால் ஏற்படுபவை அல்ல!




ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke,
ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave,
Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd
Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd,
Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com

# இலக்கியவெளியின் 'மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்' வெளியீடு

கனடாவின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான அகில் சாம்பசிவத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இலக்கியவெளி அமைப்பினால் வெளியிடப்பெற்ற 'மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்' வெளியீடு கடந்த மாதம் 3ம் திகதி ஸ்காபரோ தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் இடம்பெற்றது. பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் பேராசிரியர் அமுது யோசெப் சந்திரகாந்தன் சிறப்புரையாற்றினார். கலாநிதி மைதிலி தயாநிதி, மருத்துவ கலாநிதி மேரி கியூரி போல், கலாநிதி பார்வதி கந்தசாமி ஆகியோர் நூல் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். மருத்துவர் இ. லம்போதரன் வெளியீட்டுரை வழங்கினார். சமூக - இலக்கிய பிரமுகர்கள் பலர் வாழ்த்துரைகளை வழங்கினர். எழுத்தாளர் திரு. த. சிவபாலு அவர்கள் நிகழ்வை நேர்த்தியாகத் தொகுத்து வழங்கினார்.











# கனடிய 'தமிழ் மிரர்' பத்திரிகையின் வருடாந்த விழா

திரு சார்ள்ஸ் தேவசகாயத்தை ஆசிரியராகக் கொண்ட கனடிய 'தமிழ் மிரர்' பத்திரிகையின் வருடாந்த விழா ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. கனடிய கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. பியர் பொலிவியர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ரொறன்ரோவின் முன்னணி நடனக் கல்லூரிகளினது மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் முக்கியமாக இடம்பெற்றன.












# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

**உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட**

அழையுங்கள்
**கேதா**

**தமது சிறப்பான சேவையினால் தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுலனம்**

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், ‘இம்பிளான்ற்’ சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# நாசிப் பின்புறச் சளி

"நாசிச் சளி எண்டால் மூக்குச் சளிதானே. அது மூக்காலைதானே வடியும். அது என்ன நாசிப் பின்புறச் சளி" ?

'இடக்கு முடக்கான பெயராக இருக்கிறதே. புரிவது சிரமம். எனவே நாசிப் பின்புறச் சளி என்பதற்கு பதிலாக  தொண்டைக்குள் சளி' என்று சொல்லலாமா? Post nasal drip என்பதற்கு அது தவறான வார்த்தைப் பிரயோகம் எனத் தெரிந்தது.

நாசிப் பின்புறச் சளி என்ற பெயர்தான் புதிதாக இருக்கிறதே தவிர அது ஒரு பொதுவான பிரச்சனை. ஆனால் இனங்காணப்படுவது குறைவு. சாதாரண ஏனைய சளிகளுக்கான சிகிச்சையின் போது இதுவும் தணிந்துவிடுவதால் பெயர் சொல்லி சிகிச்சை அளிப்பது குறைவு எனலாம்.

மூக்குச் சளி பற்றி எல்லோருக்கும் தெரியும். மூக்கால் ஓடும். தண்ணீர் போலவோ, தடிப்பாகவோ அல்லது கடும் மஞ்சள் நிறத்தில் அல்லது சில தருணங்களில் நாற்றத்துடன் வெளி வரும்.

தொண்டைக்குள் சளி என்பது தொண்டைக்குள் அடைத்துக் கொண்டிருப்பது போல அல்லது கரகரப்பது போல அரியண்டப்படுத்தும். ஹா ஹா எனச் செருமி வெளியேற்ற முனைவார்கள். இது தொண்டைப் பகுதிலேயே சுரப்பதாகும். அதாவது சுவாசக் குழாயின் ஆரம்பப் பகுதிகளான தொண்டை குரல்வளை போன்றவற்றில் சுரக்கும்

ஆனால் இந்த நாசிப் பின்புறச் சளி என்பது நாசியிலிருந்து வெளியே சிந்தாது பின்புறமாகத் தொண்டையில் இறங்குவதாகும். எங்கள் உடலில் உணவுக் கால்வாய், சுவாசத் தொகுதி மலக் குடல், பெண்களின் பாலுறுப்பு என பல குழாய்கள் இருக்கின்றன. இவற்றின் உட்புறமுள்ள இழையத்திலிருந்து மென்மையான சளி போன்ற திரவம் சுரந்து கொண்டே இருக்கும். சற்றுத் தடிப்பான இந்தத் திரவமானது அவ்வுறுப்புகளை ஈரலிப்பாக வைத்திருப்பது மட்டுமின்றி நோயை ஏற்படுத்தும் கிருமிகள் உட்புகவிடாது தடுக்கவும் செய்கின்றன.

பொதுவாக இவை சுரப்பதை நாம் உணர்வதில்லை. சாதாரண அளவில் சுரந்தால் எமது கவனத்தை ஈர்க்காது எனச் சொல்லலாம். வழமையாக நாசியில் சுரக்கும் சளி போன்ற அத் திரவமானது எச்சிலுடன் கலந்து ஆரவாரமின்றி தொண்டைக்குள் புகுந்து விழுங்கப்பட்டுவிடும்.

மூக்கிலிருந்து மிக அதிகமாகச் சுரந்தால் அல்லது அதன் நீர்த்தன்மை குறைந்து தடிப்பமாக இருந்தால் மட்டுமே எங்களால் உணரப்படுகிறது. அவ்வாறு அதிகமாகச் சுரக்கும் சளியில் பெரும் பகுதி மூக்கால் வடிவதாக இருக்கும். மிகுதி மட்டுமே தொண்டைக்குள் உள்நாசி வழியாக இறங்கும்போது எம்மால் உணரப்படும்.

சளி அதிகமாகச் சுரப்பதற்கும் உள்பக்கமாக வருவதற்கும் காரணங்கள் என்ன. சாதாரண தடிமன், சளிக்காய்ச்சல்கள், தூசி, மகரந்தம், கடுமையான மணங்கள் போன்றவற்றிற்கான ஒவ்வாமை - களால் ஏற்படுவது, மண்டை ஓட்டின் காற்றறைகளில் ஏற்படும் அழற்சிகள் (இவற்றை பொதுவாக சைனஸ் அழற்சி என்போம்), குழந்தைகள் மூக்கிற்குள் ரம்பர், குண்டுமணி போன்ற ஏதாவது அந்நியப் பொருட்களை வைத்தால் வழமையாக உற்பத்தியாகும் சளி நீரானது இயல்பாக வடிய முடியாது தொண்டைக்குள் இறங்கலாம். மூக்கிலும் அருகில் உள்ள காற்றறைகளில் இருக்கக் கூடிய இயற்கைக்கு மாறான உருவ மாற்றங்கள் காரணமாகலாம்.

உதாரணமாக சிலரது மூக்கின் இடைச் சவ்வு ஒரு பக்கமாக வளைந்து இருக்கலாம். இதுவும் வழமையான சளிவடிதலுக்கு தடையாக இருக்கலாம். Deviated septum என்ற இந்தப் பிரச்சனையானது பிறப்பிலும் ஏற்படலாம். அல்லது முகம் குப்புற விழுந்து மூக்கின் சவ்வை உடைத்ததாலும் ஏற்பட்டிருக்கலாம். இரசாயனங்கள், வாசனைத் திரவியங்கள், சலவைப் பவுடரின் துகள்கள், பாத்திரங்கள் மற்றும் கழிப்பறையைச் சுத்தம் செய்ய உபயோகிக்கும் திரவங்கள் போன்றவையும் ஒவ்வாமையால் நாசிச் சுரப்பை அதிகமாக்கலாம். இவற்றை விட இயற்கையான சுவாத்திய மாற்றங்களும் முக்கிய காரணமாகும். திடீரென ஏற்படும் குளிர் சுவாத்தியம். கடுமையான வரட்சியுடன் கூடிய காற்று போன்றவற்றாலும் ஏற்படும்.

சிலருக்கு பகலில் அதிகம் இல்லாமல் இரவில் இருமும். ஆஸ்த்மாவும் இரவில் இருமலுக்கு காரணமாகலாம் என்ற போதும் ஆஸ்த்மா இருமலானது நெஞ்சிற்குள் சிறிது இறுக்கமாகவும் உணரப்படலாம்.

ஆனால் இதில் தொண்டைக்குள் சளி இருப்பது போன்ற உணர்வுடன் இருமல் வரும். ஆனால் இந்த இருமலானது இரவில் மட்டும்தான் வரும் என்றில்லை. சளி சுரப்பது அதிகமாக இருந்தால் பகலிலும் ஏற்படக் கூடும். உணவு மற்றும் மணங்கள் காரணமாயின் பகலிலும் கட்டாயம் இருமும் என்பது புரியும்தானே.

காரணம் என்னவென்று தெரியாது நீண்ட நாட்களுக்கு தொடரும் இருமல்களுக்கு முக்கிய காரணம் நாசிப் பின்புறச் சளியாகதான் இருக்கிறது. நாசியின் பின்புறமாக இறங்கும் சளி காரணமாக குரல் கரகரப்பாகும். தொண்டைவலியும் ஏற்படலாம். காது வலி அல்லது காதுக் குத்துக்கும் நாசியின் பின்புறமாக வரும் சளி யூஸ்ரேசியின் ரியூப்பை (Eustachian tube) அடைப்பதால் ஏற்படுவதுண்டு.

நீராகாரங்களை சற்று அதிகம் எடுப்பதால் சளியானது தடிப்பாக இல்லாது நீராளமாக மாறும். இதனால் அது தேங்கி நிற்காது சுலபமாக வழிந்து இருமல், காதுக்குத்து, காது அடைப்பு போன்றவை ஏற்படாமல் தடுக்கும். ஆவி பிடித்தல் மூலம் சுவாசக் குழாயிலிருந்து சளி இளகி சுலபமாக வெளியேற வைக்கலாம்.



OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca




உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585





